# சாது

முதலிய

3

சிறு கதைகள்

## C.N. அண்ணாதுரை, M.A.

பரிமளம் பதிப்பகம்,
காஞ்சீபுரம்.

முதல் பதிப்பு—மே, 1950
இரண்டாம் பதிப்பு—ஏப்ரல், 1952

42785

7607a

'திராவிட நாடு' அச்சகத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

விலை அணா 8

# சாது

## வேலாயுதம்

"பரமசாது, நம்ம தோட்டக்காரன். கோபம், துளி கூடக் கிடையாது. எனக்குச சற்று முன்கோபம் வருமல லவா', அதனலே ஒவ்வொரு நாள் அவனைக் கண்டபடி திட்டிவிடுவேன், கழுதே, நாயே, கட்டிவைத்து உதைக்கி றேன் பார், என்றெல்லாம். கோபிக்கவேமாட்டான். அவ் வளவு சாது. தலையைக் குனிந்தபடி நிற்பான். எதிர்த்து ஒரு பேச்சும் பேசவேமாட்டான், ஒருநாள், என்னமோ மனக் கஷ்டம் எனக்கு—அந்தச் சமயத திலே, அவன், ஏதோ தவறு செய்துவிட்டான், அதனலே வந்த கோபத்தில, எதிரே இருந்த என் செருப்பைத் தூக்கி வீசினேன், பயல [illegible]வேளை அவன்மீது படவிலலை. அடபோதுகூட [illegible] கோபித்துக்கொள்ள வில்லை. கீழேவிழுந்த செருப்பை [illegible]து, பழையபடி, இருந்த இடத்திலேயே வைத்து [illegible] வேலையைக் கவனிக்கச் சென்ருன். அவ்வளவு [illegible] தோட்டக்காரன். நான் பார்த்ததேயிலலை, அப் படிப்பட்ட அபூர்வமான குணமுள்ளவனை. பரமசாது"

* * * *

[illegible]ளி

"பூமாதேவி பொறுமைசாலி என்று சொல்கிருர்களே, அது தப்பு. நம்ம, பொட்டைக்கண்ணிபோலச் சாது இந்தப் பூலோகத்திலே வேறு யாரும் இருக்கமாட்டார்கள். அவளுடைய புருஷன், அவளைப் படுத்துகிற பாடு, அடடா! தெய்வங்கூடச் சகிக்காது. நின்ன உதை, குனிந்தாக் குத்து. ஒரு காரணமுமில்லாமல் சண்டைபோட்டு, அவளை, நாயைப்

பேசுகிற மாதிரியாப் பேசி, கையிலே கிடைச்சதை எடுத்து வீசி, நாசம் செய்கிருன். குழம்பிலே ஏண்டி காய் இல்லே, காயிலே ஏண்டி ருசி இல்லே, மாடத்திலே ஏண்டி காசு இல்லே பிள்ளை ஏண்டி தூங்கவில்லே. பேசினு ஏண்டி பதிலில்லே, என்று, இப்படி விநாடிக்கு விநாடி 'டி' போட்டுத் திட்டிய படி இருப்பான். இவ்வளவு உதையையும் பட்டுக்கொண்டு, அந்தப் புண்ணியவதி, பாவம், வாய்திறந்து ஒருபேச்சுபேச மாட்டா பதிலுக்கு. அவவளவு சாது—அவ்வளவு பொறுமை சாலி, நான் எவ்வளவோ பேரைப் பார்த்திருக்கிறேன், அவ ளைப்போல, அடக்க ஒடுக்கமானவளைக் கண்டதே இல்லே. கோணல் சேட்டை ஆடுகிறதைப் பொறுத்துக்கொண்டு, எப்படியோ, குடித்தனம் செய்கிறு, அந்தப் புண்யவதி. சாது. பரமசாது."

*  *  *  *

செல்லி

"பொம்பளையா இவ! பஜாரி! கிணற்றுக்கு வந்தாப் போதும், ஒரே ஆர்ப்பாட்டம். ஒரு சொல்லுச் சொல்வதற் குள்ளே, ஓஹோன்னு கூவிகொண்டு, சண்டைக்குக் கிளம்பி விடுகிறு. ஒரு காரணமும் இல்லாவிட்டாக்கூட, சண்டை போடுகிறு. அப்பப்பா! என்னென்னதான் பேசறு தெரியுமா! சபிச்சிக் கொட்டுறு! வாயிலே வரத்தகாத பேச் செலலாம், பேசுவா. பேச்சோடு விடுகிருளா! குடத்தாலே இடிப்பா, கூந்தலைப் பிடித்து இழுக்கிறு, சிலசமயம் அடிக் கவே வந்துவிடுகிறு. அடங்காப்பிடாரி! வம்புச் சண்டைக் காரி! வாய்க்கொழுப்புக்காரி. அவ கிணற்றண்டை வருகி ருன்னு தெரிந்தாலே, நான் போகமாட்டேன், செ! அந்த வாயாடி, போக்கிரிக் கழுதை போய்த் தொலேக்கட்டும்னு வீட்டிலே இருப்பது. அப்பா! நானும் எத்தனையோ பொம்

ஜோகளைப் பார்த்தேண்டியம்மா, இவளைப்போல், பஜாரி யைக் கண்டதில்லை. சனியன்! ஒழியுதாம், புருஷன் வீட்டுக்கு, நாளைக்கு. போய்த் தொலைக்கட்டும். நம்ம ஊர் க்ஷேமப்படும். கிணற்றுப்பக்கம், தாராளமாகப் போய் வரலாம் இனி.

*　　*　　*　　*

பரமசாது என்று எஜமானரால் பாராட்டப்பட்ட தோட்டக்காரனேதான், நின்னு உதை குனிந்தா குத்து கொடுக்கும் கணவன்!

அந்தக் கணவனுடைய கோணல் சேட்டைகளைப் பொறுத்துக்கொண்டு' 'பூமாதேவியைவிடச் சாது'வாக இருக்கும் பொட்டைக்கண்ணிதான், கிணற்றருகே போனால் வாயாடி வம்புச்சண்டை பிடிக்கும் பஜாரி!

பரமசாது, கொடிய கணவனாவதும், அடக்கமான மனைவி அடங்காப்பிடாரியானதும், ஏன்?

எஜமானரிடம் அவன் படும் கொடுமைகள், அந்தப் பரமசாதுவின் மனதிலே கிளப்பிவிடும் கோபம் இருக்கிறதே, அங்கு அவர் எதிரே அடங்கிக் கிடக்கிறது; வீட்டில், அபலையின் முன்னே, வெளிவருகிறது—பரமசாது, கோபம் தலைக்கேறிய கொடியவனாகிறான்.

அவனுடைய கொடுமைகளைச் சகித்துக்கொண்டு, பரமசாதுவாகப், பொறுமைசாலியாக இருக்கும் அந்த மனைவியின் மனதிலே, அந்தச் சமயங்களிலே மூண்டுவரும் கோபம், அப்போது அடங்கிக் கிடக்கிறது, புற்றுக்குள் இருக்கும் பாம்புபோல. தாய் வீட்டில், கிணற்றருகே, வேறு பெண்கள் எதிரே, அந்தப் பாம்பு, படமெடுத்தாடுகிறது. அப்போது, பரமசாது, பஜாரியாகிறாள்!

வேலை செய்யுமிடத்திலே சாது! வீட்டிலே கோடக் காரன்!

புருஷன் எதிரிலே பொறுமைசாலி, அவளே பிறகு பஜாரி, வேறு பெண்கள் எதிரில்!

சேலம் 'ஒகயனக்கல' அருகே, ஆடு தாண்டும் அள வுள்ள காவேரி, பிறகு அகண்ட காவேரியாகிறதே வேறு ஜில்லாவில், அதுபோல. இடபேதம், இயல்பு பேதத்துக் குள்ள பல காரணங்களிலே ஒன்று. ஒரு இடத்திலே, கோபத்தைக் காட்டமுடிவதில்லை. ஆனால், கோபமே ஏற் படவில்லை என்று பொருள் அல்ல. அது கொதித்துக் கிளம்புகிறது, வேறோர் இடத்தில்.

தோட்டக்காரன் பரம சாதுவாகத்தான் இருந்து தீர வேண்டி நேரிடுகிறது. இடம் அப்படி.

பொட்டைக்கண்ணி, பொறுமைசாலியாகத்தான் இருக்கவேண்டி நேரிடுகிறது—புருஷன் எதிரில.

வீட்டில் அவன், தன் கோபத்தைக் காட்டமுடிகிறது தாராளமாக—ஆகவே, வேலை செய்யுமிடத்திலே, கட்டிப் போடப்பட்டிருந்த கோபம், கட்டுகளை அறுத்துக்கொண்டு, காட்டுமிருகம் போலாக்கிவிடுகிறது, பரமசாதுவை. அவள் நிலையும் அதுதான், தாய் வீட்டிலே, கிணற்றருகே, புருஷன் இல்லாத இடத்திலே.

அவர்கள் மட்டுந்தானா! நாம்? எத்தனையோ சம்பவம் இபபோது நினைவிற்குக் கொண்டுவந்தால், தெரியும்—பரம சாதுவாக இருப்போம் சிலசமயம், கோபம் கொப்பளித் தெழும் சிலசமயம்—இடபேதம் இயல்பைப் பேதப்படுத்தி இருக்கும். உளப் பண்பின் நுட்பமறிந்தவர்கள், கூறுகின்ற னர், ஒருசமயத்தில், எக்காரணம் கொண்டோ, ஏதோ ஓரிடத்தில் மூண்டு, இடபேதம் காரணமாக அடக்கப்பட்ட

மாட்டே—அவ்வளவு அடக்க ஒடுக்கமா, சாதுவாக இருந்தவன், இப்படி, ஒரு சொல் சொல்லாத முன்பு, கோபம் தலைக்கு ஏறி, கொக்கரிக்கிறயே, என்னடா சங்கதி?

*   *   *   *

**அந்தச் சங்கதி இது!**

இருப்பது இதுதான்.

என்ன கழுதே! கேட்டா, இதுதான்னு, கத்தறே. எனக்கு வெண்டைக்கா பிடிக்காதுன்னு உனக்குத் தெரியாதா கழுதே!

தா! சும்மா கழுதே மேய்க்காதே!......

அடி, நாயே! என்னடி என்னமோ எதிர்த்து எதிர்த்துப் பேசறே.

உள்ளதைச் சொன்னு, எதிர்க்கிறதுன்னு பேரா? நீ, காரணமில்லாமே, கண்டபடி பேசுவே, கல்லா, நானு? காலமெல்லாம் இந்தக் கதிதானு எனக்கு? உன் மனசு என்ன இரும்பா!

அடடே! உபதேசம் செய்யக் கத்துகிட்டாயா? கழுதே!

மறுபடியும், மறுபடியும்......

சொன்னு, என்னவாம்! பதில் பேசினே, உதைதான்...

உதைச்சித்தான் பாரேன்.

உதைச்சித்தான், பாரேன்......

*   *   *   *

எழுந்தான், உதைத்தான்—ஆனால் அவன்தான் வீழ்ந்தான். பொட்டைக்கண்ணி, அந்தக் காலைப் பலமாகப் பிடித்து ஒருபக்கம் திருப்பிவிட்டாள்.

அதுதான் நடந்த சங்கதி. அவனைச் சிந்திக்கவைத்தது. நெடுநேரம் யோசித்தான்—பலப்பல—புதுப் புதுவிதமாக யோசனை உதித்தது. புது ஆளானன்.

வேலாயுதத்துக்கு, அந்தச் சங்கதியும், அந்தச கூட சமமும் தெரியாது. அவன் ஆச்சரியப்பட்டான், பரமசாது, ஏன் இப்படி எதிர்த்துப் பேசுகிறுன் என்று.

* * * *

சரி! வாயை மூடுடி, உனக்குத்தான் பேசத தெரியும்னு எண்ணமா?

பேசண்டி, பேசு. பேயாட்டம் ஆடண்டி ஆடு.
சரி, கிடடி கழுதே முண்டே.
யாருடி கழுதே!
நீ, தாண்டி நாயே!

* * * *

கிணற்றங்கரை அமளி! பொட்டைக்கண்ணியின் ஏக சக்ராதிபத்யம், உடைந்தது, செல்லியின் எதிர்ப்பால்.

உடைந்தது மட்டுமல்ல, பொட்டைக்கண்ணிக்கும் புதுப் புது எண்ணம் உதித்தது. அதன் விளைவுதான், புருஷனிடம் அவள், எதிர்த்துப் பேசியது. அதன் பலன் தான், அவள் கணவன் தன் சர்வாதிகாரம் சரியக் கண்டது. அதன் தொடர்ச்சிதான்; வேலாயுதம், பழையபடி தோட்டக்காரனை எவ்வளவு கண்டித்தாலும், அவன் பரமசாதுவாக இருப்பது இனி நடைபெறுது என்பதைத் தெரிந்து கொண்டது.

வேலாயுதமும், சிந்திக்கலாஞன், தோட்டக்காரனைப் போலவே, பொட்டைக்கண்ணி, போலவே. அவனும் அவர்களைப்போலவே, முறையையும் இயல்பையும் மாற்றிக்கொண்டான். முன்கோபம் இல்லை.

அதோ பேசுகிறுன், கேளுங்கள்.

"எண்டாப்பா,......அடா புடான்னு கூப்பிடுவானேன் ......துரைசாமி! தோட்டத்துக்குத் தண்ணி பூரா பாய்ச்சியாச்சா?"

"ஆச்சிங்க''

"அப்பொ, வீட்டுக்கு போய்ட்டு, வாப்பா."

*   *   *   *

"குழம்பிலே, உப்பு குறைவு குப்பி"

"ஆமாங்க. கவனிக்கலே''

"கொஞ்சம் போடு"

"அதோ மேல்சட்டியிலே இருக்கு பாரு; எடுத்து போட்டுக்கோ. நான் குழந்தைக்கு பால் கொடுக்கறேன்.''

"ஆமாம். நீ இரு. நான் எடுத்துக்கொள்றேன்,''

*   *   *   *

மாறிவிட்டது, சுபாவம்! அளவுக்கு மீறித், தண்ணீர் வந்தால், ஆற்றிலிருந்து, வாய்க்காலில திருப்பிவிட்டு, வெள்ளத்தின் வேகத்தைக் குறைக்கிறோமல்லவா! உள்ள உணர்ச்சியும் அப்படித்தான். அடக்கியே வைத்திருக்க வைத்திருக்க, எங்கெங்கோ பாயும்—மேயும்; கட்டுக்குக் கொண்டு வந்து, பக்கம் பார்த்துத் திருப்பிக், கொதிப்பேறுதபடி குறைத்து முறைப்படுத்தினல், மோதுதலும் தாக்குதலும் குறையும். இது, நிகழும்போது தெரிவதில்லை. ஆனல் இந்த 'ரசாயனம்' வெற்றிபெற்று, நிலைமை மாறின பிறகு, நாம் கூறிவிடுகிறோம், சூட்சமத்தைத் தெரிந்துகொள்ளாமல், அவன் நல்லவன், இவன் நல்லவன் என்று. இயல்பு, அவ்விதம், பொதுவான இலக்கணத்துக்கு உட்படுவதில்லை. இடம், காலம், முறை, சம்பவங்கள், பயிற்சி, மற்றவருடன் கொள்ளும் தொடர்பு, ஆகியவைகளாலே, உருவாக்கப்பட்டும், வளர்ந்தும், மாறியும், வேறு உருப் பெற்றும், ஒவ்வொரு விநாடியும், வளருகிறது. அதன் தன்மையை, அறுதியிட்டுக் கூறிவிடமுடியாது—கூறவும் கூடாது.

# தேடியது, வக்கீலே!

"பலமான அடி! இரத்தம் வெள்ளம்போல வந்தது. டாக்டர்! கொஞ்சம் அவசரமாக வரவேண்டும். ஆசாமி மூர்ச்சையாகிவிட்டிருக்கிறான்."

"ஏன் சார்? அடிபட்டது யாருக்கு?"

"இந்த ஆளுக்கு"

"இல்லை, நீ போடுகிற கூச்சலைப் பார்த்தால், உனக்குத் தான் அடிபட்டது, அதனாலேதான் இப்படி அலறுகிறாய் என்று நினைத்தேன். இங்கிதமே தெரிவதில்லை. வேறு எந்த இடத்திலே வேண்டுமானாலும் கூவலாம் கொக்கரிக்கலாம், டாக்டர்கள் இருக்கும் இடத்திலே நிசப்தம் இருக்கவேண்டும், தெரிகிறதா?"

"சரிதான், சார்!"

*  *  *  *

டாக்டர், நர்சுக்குச் சாவதானமாகச் சில விஷயங்கள்—வைத்திய சம்பந்தமாகத்தான்—கூறிவிட்டு, பிறகு வந்தார். அடிபட்ட ஆசாமி, பலகைமீது படுத்துக்கிடந்தான். சட்டை பூராவும் இரத்தமயம். பக்கத்திலே நின்றுகொண்டிருந்தான், டாக்டரை அவசரப்படுத்தியவன்.

"என்ன இது?" என்று கேட்டார் டாக்டர். யாரோ போலீஸ் அதிகாரி பேசுவதுபோல இருந்தது, அவருடைய குரல், பாவனை, பார்வை.

"இவன் என் நண்பன், எக்கச் சக்கமாக ஒரு இடத்தில் அகப்பட்டுக்கொண்டான்; இப்படி அடித்துவிட்டார்கள்"

"போலீசுக்கு அல்லவா போகவேண்டும், அங்கே சென்று, அடிபட்ட விதம், அடித்த ஆளின் பெயர் இடம் இவைகளைக் கூறிவிட்டு வந்தால், பிறகு அவர்களே என்னை அழைப்பார்கள்"

"போலீசுக்குப் போவதற்கில்லை"

"ஏன்? குடித்துவிட்டு ஆடினை; கூத்தி வீட்டில் அடிபட்டவனு? அல்லது திருடி உதைபட்டானு? போலீசுக்குத் தெரியக்கூடாத விதத்திலே அடிபட்ட "மர்மம்" என்ன?"

"ஐயயோ, நீங்கள் வீணுகவெல்லாம் சந்தேகப்படுகிறீர்களே! அப்படி ஒன்றுமில்லை. இவன், தன்னுடைய நெருங்கிய உறவினரிடம் அடிபட்டான், அதைப் போலீசுக்குத் தெரிவிப்பதற்கில்லை என்றேன்; வேறென்றுமில்லை"

* * *

இந்தப் பேச்சுக்கிடையிலேயே, டாக்டரின் திட்டப்படி, கம்பவுண்டர், அடிபட்ட இடத்தைச் சுத்தம் செய்து, மருந்து பூசி, கட்டுக் கட்டிவிட்டான். அடிபட்டவனின் கண்கள் கொஞ்சம் திறந்தன, மீண்டும் மூடிக்கொண்டன. டாக்டர், ஒரு முழுங்கு பாலை, அவன் வாயில் கொட்டச் சொன்னர். அந்தச் சடங்கும் முடிந்தது. பிறகு, கம்பவுண்டர் 'பில்' தயாரிக்கலானுர்.

"பெயர்?"

"என் பெயரா?"

"இல்லய்யா, இவன் பெயர்?"

"இவன் பெயா, இருதயநாதன்!"

"விலாசம்?"

"தற்போது, என் வீட்டு விலாசந்தான், 18—பக்கிரிப் பிள்ளை சந்து"

"உன் பெயர்?"

"எம்பெருமான் பிள்ளை"

பில் தயாரிக்கப்பட்டது. பணமும் தந்துவிட்டார். பிறகு, பணிவுடன் டாக்டரிடம், எம்பெருமான் பிள்ளை ஒரு விஷயம் கூறினார்.

"இன்று இரவு, இங்கேயே இருக்கவேண்டும்; வேறே இடத்திலே சௌகரியம் இல்லை. என் வீட்டிலே ஒரு கலியாணக் கூட்டம் வந்திருக்கிறது" என்றார். டாக்டர், அதற்கான 'பில்' தயாரிக்கச் சொல்லிவிட்டு, நோயாளிக்கு வேண்டியவைகளைக் கவனித்துக் கொள்ளும்படி கம்பவுண்டருக்குக் கட்டளையிட்டுவிட்டு, கார் ஏறி, பங்களா சென்றார். ஏன் அடிபட்டான்? எப்படி அடிபட்டான்? என்பது பற்றி மேலால் தகவலும் கேட்கவில்லை; அடி பலம், அல்லது சாமான்யம், என்ற தகவலும் தரவில்லை. இதுபோல எத்தனையோ, 'கேசு'களைக் கண்டவர், இதிலே அவர் ஆச்சரியப் படுவாரா!

* * * *

படுக்கையில் புரண்டபடி, இருதயநாதன் பிதற்ற ஆரம்பித்தான். எம்பெருமான், "என்னப்பா இருதயம்! ரொம்ப வலியா?" என்று கனிவுடன் கேட்டான், "பால் வேண்டுமா? பழம் வேண்டுமா?" என்று கேட்டான். இருதயநாதனோ, கேள்விகளுக்குப் பதில் கூறவில்லை. ஒன்றுக்கொன்று சம்பந்தமற்ற வார்த்தைகளைக் கூறிக்கொண்டும், மிரட்சியுடன் பார்த்துக்கொண்டும் இருந்தான். கம்பவுண்டரோ, "காலையிலே எல்லாம் சரியாகப் போகும்" என்ற பாடத்தையே திருப்பித் திருப்பிச் சொன்னான்.

இரவு மணிபன்னிரண்டுக்கு, இருதயநாதன், கொஞ்சம் பலமாகப் பிதற்றினான். எழுந்தோடிப்போய். "என்னப்பா

இருதயம்!'' என்று எம்பெருமான் அன்புடன் கேட்டான். தன்னுடன் பேசுவது எம்பெருமான் என்று கூட இருதயநாதனால் தெரிந்துகொள்ள முடியவில்லை.

"நான், இப்போது எங்கே இருக்கிறேன்?" என்று கேட்டான்.

"டாக்டர் வீட்டிலே அப்பா!" என்று எம்பெருமான் பதிலளித்தான்.

"டாக்டர் வீட்டிலா? வக்கீல் வீடல்லவா இது!" என்று கேட்டான் இருதயநாதன்.

கம்பவுண்டர், அப்போதுதான் கொஞ்சம் பயந்து, "ஏன் சார்! இந்த ஆசாமிக்குப் பைத்யமோ?" என்று கேட்டான் எம்பெருமானை, இல்லையே, சார்! அடிபட்ட அதிர்ச்சியிலே ஒருசமயம் மூளை......'' என்று எம்பெருமான் கலக்கத்தோடு கூறினன். "இருக்கலாம்! அப்படியும் சில கேஸ் உண்டு!" என்றான் கம்பவுணடர்.

"இதைப்போன்ற கேஸ், நீங்கள் கேள்விப்பட்டே இருக்கமாட்டீர்கள் சார், எந்த வக்கீலும் கேள்விப்பட்டிருக்கமாட்டார் சார்! இந்தக் கேசைமட்டும் நீங்கள் ஜெயித்துக் கொடுத்தால, ஜகம் புகழும் சார், உங்களை'' என்று இருதயநாதன், உரத்த குரலிலேயே கூறலானன்.

"என்ன சார் இது! வக்கீல, கேஸ், என்று உளறுகிறானே" என்று கம்பவுண்டர் கேட்டார். எம்பெருமான் இருதயநாதனைச் சாந்தபபடுத்திப் படுக்க வைத்துவிட்டுக் கம்பவுண்டரிடம், "இவன் வக்கீல் தேடி அலைந்துதான், இந்த வம்பை விலைக்கு வாங்கிக்கொண்டான். தேடி வந்தது வக்கீலை, அடைந்ததோ டாக்டர் வீட்டை'' என்றான். கம்பவுண்டருக்குச் சந்தேகம் அதிகரித்தது; ஏதடா! இவனும் என்னென்னமோ உளறுகிறானே என்று பயந்தார்.

அதைச் சூட்சமமாகத் தெரிந்துகொண்ட எம்பெருமான் புன்னகை செய்து, "கம்பவுண்டர் சார்! நானும் பைத்தியக் காரனல்ல, என் நண்பனும் பித்தனல்ல. உண்மையில் நடந்ததைத்தான் சொன்னேன். இன்று காலை முதல், வக்கீலைத் தேடித் தேடித்தான் அலைந்தான் என் நண்பன், அவனுக்கு உதவியாக நானும் சென்றேன். வக்கீல் தேடிய பலன் மண்டையில் அடி, மயக்கம் என்று ஆயிற்று, அந்தக் கதையைச் சொல்கிறேன் கேளும்" என்று கூறினான்.

*　　*　　*　　*

ஒருநாள் மாலை, நான் வேலை பார்த்துவரும் வைரக் கம்பெனி சொந்தக்காரர் சொக்கலிங்க செட்டியார், தமது அறையில் உட்கார்ந்துகொண்டிருந்தபோது, நான் கடை விஷயமான ஒரு முக்கியமான தகவலை விசாரிக்க அங்கே சென்றேன். செட்டியார் அறைக்குள்ளே, பேச்சுச் சத்தம் கேட்கவே, வெளியே நின்றேன். செட்டியார் மிகக் கோபத்துடன் பேசிக்கொண்டிருந்தார்.

"முடியுமா? முடியாதா?"

"முடியவே முடியாது!"

"நிச்சயமாக முடியாதா?"

"யாரடா அவன், சுத்த பன்னாடையாக இருக்கிறே, என் மகளை ஏதாவது ஒரு பாழுங்கிணற்றிலே பிடித்துத் தள்ளினாலும் தள்ளிவிடுவேனே தவிர, உனக்குத் தர முடியாது."

பெண் தரமுடியாது என்று கோபமாகப் பேசியது செட்டியார்; எனக்குத் தூக்கி வாரிப்போட்டது; ஏனெனில் செட்டியாருக்குப் பெண்ணே கிடையாது!"

"ஆச்சர்யமாக இருக்கிறதே" என்று கூறினான் கம்பவுண்டர்.

"என் வாழ்நாளிலேயே நான் அதுபோன்ற ஆச்சரியத்தை அடைந்ததில்லை. செட்டியாருக்கு ஓரே மகன், பெண் கிடையாது. அவருக்குத் தாசி சிநேகம், எதுவும் கிடையாது. ரொம்பக் கர்நாடக பேர்வழி, பக்தர். ஆகவே, அவர், யாரிடமோ "என் பெண்ணை உனக்குத் தரவே முடியாது" என்று கூறுவது கேட்டால், எனக்கு எப்படி இருக்கும். கதவு திறக்கும் சத்தம் கேட்டது; நான் விரைவில் மறைந்துகொண்டேன் ஒருபுறமாக. அறைக்கு உள்ளே இருந்து, இருதயநாதன் வந்தான்—அன்றுதான் நான் இவனை முதன் முறையாகப் பார்த்தது. என்னை அவன் பார்க்கவில்லை. கோபமாக வெளியே போய்விட்டான். நான் கொஞ்ச நேரத்துக்குப் பிறகு, செட்டியாரிடம் பேசிவிட்டு, வழக்கப்படி வீட்டுக்குப் போனேன். உள்ளே தாழ்வாரத்திலே, இருதயநாதன் உட்கார்ந்துகொண்டிருந்தான்!"

"அடடே! ஆச்சரியம் வளருகிறதே" என்றான் கம்பவுண்டர்.

"முடியவில்லை ஆச்சரியம்! கேளுங்கள் மற்ற விஷயத்தை. யார்? பெயர் என்ன? எதற்காக வந்தாய்? எந்த ஊர்? என்று கேள்விமேல் கேள்வி பூட்டினேன். அவன் செட்டியாரிடம் பேசிக்கொண்டிருந்தது எனக்குத் தெரியுமென்றே நான் காட்டிக்கொள்ளவில்லை.

"உங்கள் பெயர் தானே எம்பெருமான் பிள்ளை?" என்று என்னைக் கேட்டான் அவன். "ஆமாம்!" என்றேன். "வைர வியாபாரம் சொக்கலிங்க செட்டியார் கடையிலே கணக்கு எழுதுபவர் நீங்கள் தானே?" என்றான். "ஆமாம்" என்றேன். "உங்களால் எனக்கு ஒரு காரியம் ஆகவேண்டும்" என்றான். "முடிந்தால் செய்கிறேன். முதலிலே நீங்கள் யார்? என்ன விசேஷம்? இவைகளைக் கூறுங்கள்" என்று நான் கேட்

டேன். "என் பெயர் இருதயநாதன்; இருப்பிடம் திருநெல வேலி அருகே ஒரு கிராமம்" என்ருன். "சரி! என்ருல் என்ன ஆகவேண்டும்?" என்று கேட்டேன். அவன் என்னிடம் ஏதும் கூறுவதற்குள், மற்ருெரு கேள்வியும் கேட்டுவிட்டேன். "இன்று செட்டியாரிடம் ரொம்பக் கோப மாகப் பேசிக்கொண்டிருந்தீரே?" என்றேன். அவன் ஆச் சரியப்பட்டான். "அவர் சொல்லவில்லை, நான் தற்செய லாகக் கேள்விப்பட்டேன்" என்று கூறி அவன் ஆச்சரியத் தைத் தணியவைத்தேன்.

"நான் கூறப்போவது கேட்டு, ஆச்சரியத்தால் திடுக் கிடவேண்டாம்" என்று அட்டவணை போட்டான் இருதய நாதன். "கதை இருக்கட்டும். முதலிலே ஒரு விஷயம் கூறிவிடு. செட்டியாருக்குப் பெண் ஏது?" என்று நான் கேட்டேன். கோபமும் வெறுப்பும் வெளிப்படச் சிரித் தான், இருதயநாதன்.

"சொக்கலிங்கம் செட்டியாருக்குப் பெண் கிடையாது; ஒரே ஒரு மகன்தானே இருக்கிருன்" என்ருன்.

"நீ, பெண் கொடு என்று கேட்டாய். அவர் என் பெண்ணைக் கிணற்றிலே தள்ளினாலும் தள்ளுவேன், உனக் குத் தரவேமாட்டேன் என்றும் சொன்ருரே!" என்று கேட் டேன். "நான் சொக்கலிங்கம் செட்டியாரைப் பெண் கேட்க வில்லையே, சொரூபானந்த ஸ்வாமியைக் கேட்டேன்!! என்று அவன் சொன்ஞன். நான் மிரண்டேன், புரியாமல. இருதய நாதன், "புரியாது உங்களுக்கு. உங்கள் சொக்கலிங்கம் செட்டியார், எங்களுக்குச் சொரூபானந்த ஸ்வாமி. சொக்க லிங்கம் செட்டியாருக்கு ஒரு மகன் இருப்பதுபோலவே, சொரூபானந்த ஸ்வாமிக்கு ஒரு பெண், பெயர் கருணை! உங் கள் ஆச்சரியம் அதிகமாகிவிட்டிருக்கும்; விரைவில போக்கி

விடுகிறேன். இங்கு வைர வியாபாரம் செய்யும் சொக்கலிங் கம் செட்டியார், பல வருஷங்களுக்கு முன்னால், எங்கள் பக்கத்திலே சொரூபானந்த ஸ்வாமியாக உலவி, வைதீ' கத்தை வியாபாரம் செய்துகொண்டிருந்தார், இப்போது கூட எங்கள் பக்கத்திலே வந்தால, சொரூபானந்த சாமி களின் மடாலயம் இருக்கக் காணலாம். அருள் பெற்றவர் என்று, அவரை வணங்காதவர்கள் கிடையாது, வருஷத் துக்கு ஒருமுறைதான் வருவார். இரண்டொரு மாதங்கள் தங்குவார். காணிக்கை குவியும், பூஜை பலமாக நடக்கும், சாவமத சமமதத்தைப் போதிப்பார், பிறகு போய்விடுவார், எங்கிருந்து வருகிறார், எங்கே தங்குகிறார் இங்கே வராத சமயத்தில, என்பது யாருக்கும் தெரியாது. வருஷத்தில பத்து மாதம் வனாந்தரங்களிலே வாசம் செய்கிறார் என்றே சகலரும் கூறினர். சித்து விளையாடுபவர் என்று சொல்வார் கள். அவர்கள் அறியமாட்டார்கள், உங்கள் சொக்கலிங்கம் செட்டியாரேதான், பத்து மாதம் வைர வியாபாரம செய்து கொண்டிருப்பதும், பாக்கி நாட்களிலே எங்கள் பக்கங்களில சொரூபானந்தராக இருப்பதுமான 'சித்து' விளையாடுகிறார் என்று. அவருடைய தரிசனத்தால பலன் கிடைக்குமென்று வந்தவர்களிலே விதவை ஜோதியும் ஒருத்தி. ஜோதி, கிருஸ் துவ மார்க்கத்தைத் தழுவிய பிறகு வந்த பெயர்; முதல பெயர் முத்தாயி. ஜோதியின விதவைத்தனம சொரூபா னந்தரால போக்கப்பட்டது; கருணை பிறந்தாள். ஊரார் இதை அறியமாட்டார்கள்; ஜோதியும், சொரூபானந்தரே, நாட்டிலே இந்தப் பக்கத்திலே சொக்கலிங்கம செட்டியாராக இருப்பதைத் தெரிந்துகொண்டவளல்ல. ஜோதி, கருணை வைக் குழந்தையாக இருக்கும்போதே விட்டு, இறந்து போனாள். இப்போது அவளுக்குப பதினெட்டு வயது. அழகி, அறிவாளி, படித்துத் தேறி இருக்கிறாள். இனிமை

யாகப் பாடுவாள். என்னை மனப்பூர்வமாகக் காதலிக்கிறாள். என் இருதயத்திலே அவளே நாயகி, அவளுக்கு நானே இருதயநாதன்."

"ஆனால்' இவ்வளவு 'மர்மமும்' உனக்கு எப்படித் தெரிந்தது?" என்று நான் கேட்டேன்.

"அதுவா? அதுவும் ஒரு வேடிக்கைதான். சொரூபானந்த ஸ்வாமி என்ற வேஷத்திலே, சொக்கலிங்கம் செட்டி உலவி, பக்தர்களை ஏமாற்றிப் பொருள் பறிப்பதற்கு, உடந்தையாக இருப்பவன், எங்கள் ஊர் ஆசாமி. அவனே பிரதம சீடனாக இருந்தவன்; அவன் மூலமாகவே, சொரூபானந்தரின் புகழ் பரவிற்று."

'ஸ்வாமி, எப்போது வரும்?' என்று அவனைத்தான் ஊரிலே கேட்பார்கள்.

"நேற்றிரவு சொப்பனத்திலே தோன்றினார்; தோன்றி இன்னும் பத்து நாளிலே வருவதாகச் சொல்லிவிட்டு மறைந்தார்" என்பான், சடையன் என்ற பெயரை ஜடாதர ஸ்வாமி என்று மாற்றிக்கொண்ட அந்தக் கபடன்.

"ஸ்வாமி! என் மனதை வாட்டும் விஷயமாக..." என்று பக்தர் கூறவேண்டியதுதான், உடனே சொரூபானந்தர்,

'ஏனப்பா' புதிய வீடு வாங்கி இருக்கிறாயே, அது நல்லதா அல்லவா, என்பதுதானே உன் கவலை" என்று புன்னகையுடன் கேட்பார். பக்தருக்குப் பரமானந்தம்; ஸ்வாமி, மனதிலுள்ளதை அறிந்து கூறிவிடுகிறாரே என்று. ஒவ்வொரு பக்தரின் மனதிலிருப்பதையும் சொரூபானந்தர் அறிந்து கூறுவார். ஏன் முடியாது! அவ்வப்போதுதானே, சடையனுக்கும் சொக்கலிங்க செட்டியாருக்கும் கடிதப் போக்கு வரத்து நடக்கிறதே. இந்நிலையிலே, ஜடாதர ஸ்வா

மிக்குச் சீடராக இருப்பது அலுத்துப் போகவே, சொக்கலிங்கம் செட்டியார் இனிமேல சொரூபானந்த ஸ்வாமியாக வரவேண்டியதில்லை என்று கூறிவிட்டு, ஸ்வாமிகள் ஜோதியில கலந்துவிட்டார் என்று தெரிவித்துவிட்டான். அவனை மீறி, சொக்கலிங்கம் செட்டியாரால் நடந்துகொள்ள முடியாது. அவன் சொன்னதாலதான், எனக்கு உங்கள் செட்டியார் விஷயம் தெரியும். எனக்குத் தெரிந்தது ஊராருக்கு இன்னமும் தெரியாது. நான் சொன்னாலும் ருஜுப்படுத்த ஆதாரம் இல்லை. சொரூபானந்தர், தமது கரத்திலே 'ஜோதி' என்று பச்சை குத்திகொண்டிருக்கிறார் என்று ஜடாதரன் சொன்னான். தற்செயலாக அவருடைய கையைப் பார்த்தேன். 'ஜெகஜோதி' என்று பசசை'குத்தப்பட்டிருக்கிறது. அது அவருடைய வைரத்துக்குப் பெயர் எனறு விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, 'ஜோதி' என்று பச்சை குத்தப்பட்ட ஆதாரமும் எனக்குத் துணை செய்யாது.

"அது கிடக்கட்டும, கருணா எங்கே இருக்கிறாள்? அவள் உன்னைக் காதலிக்கும்போது, செட்டியாரின் சம்மதத்தை ஏன் கேட்கிறாய்? கருணாவுக்குச் செட்டியார்தான் தன் தகப்பன் என்பது தெரியுமா?" எனறு நான் பல கேள்விகளைக கேட்டேன். இருதயநாதன், "கருணா யார் தெரியுமா? அதாவது, எங்கள் ஊர் ஜோதிக்கும் சொரூபானநதருக்கும் பிறந்தவள் ஆனால், ஊராரின் நினைப்பு என்ன தெரியுமா? இப்போது அவள், எல்லப்ப முதலியாரின் ஏக புத்ரி! எல்லப்ப முதலியார், நெடுநாட்களாகக் குழந்தை இலலாமலிருந்தார். அவர் சொரூபானந்தரின் மகிமையைக் கேள்விப்பட்டு, பிள்ளைவரம் கோரி எங்கள் ஊரில வந்திருந்து பூஜை நடத்தினார். அந்தச் சமயத்தில்தான், ஜோதிக்குப் பெண் பிறந்திருந்தது! அதனை, சொரூபானந்தர், 'கடவுட் பிரசாதம்' என்று சொல்லி, எல்லப்ப முதலியாருக்குத் தந்தார். கருணா

இன்று, எல்லப்ப முதலியாரின் மகளாக இருக்கிறாள். என்னுடன் கல்லூரியில் படித்தாள்; காதலித்தோம். எல்லப்பரையே சென்று கேட்டேன். கருணையும் தைரியமாகவே அவரிடம் தன் பிரியத்தைச் சொல்லிவிட்டாள். அவரோ எதற்கும் 'குருதேவரைக்' கேட்டுச் சொல்கிறேன் என்று கூறிவிட்டார். கொஞ்சநாள் கழித்துச் சென்றபோது, 'முடியாது!' என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார்' என்ன நடந்ததென்றால், எல்லப்ப முதலியார், சொரூபானந்தரின் கடாட்சத்தால் கிடைத்த குழந்தையின் விஷயமாக, அவரிடம் நேரில கேட்டுச் செய்வதற்கில்லை: என்றபோதிலும், சொரூபானந்தருக்குப் பிறகு பட்டத்து வந்திருக்கும் ஜடாதரரின் சம்மதமாவது பெற்றுத்தானாகவேண்டும் என்று எண்ணினார். அவருக்குத் தெரியாது, சொரூபானந்த ஸ்வாமி என்ற வேஷமே, சொக்கலிங்கம் செட்டியின் புரட்டு என்பது. ஜடாதரர், சம்மதம் தருவதற்கு முன்பு, சொக்கலிங்கம் செட்டியாருக்கு இரகசியமாகத் தகவல் அனுப்பி விசாரித்திருக்கிறார். ஏனெனில், கருணையின் பிறப்பு வளர்ப்பு சகலமும் ஜடாதரனுக்குத் தெரியும். சொக்கலிங்கம், ஜடாதரனுக்குச் செய்தி அனுப்பிவிட்டார், கருணை, கட்டாயமாக இருதயநாதனை மணம் செய்துகொள்ள 'உத்தரவு' தராதே என்று. ஜடாதரர் உத்தரவு கிடைக்காததால், பெண் தரமுடியாது என்று எல்லப்ப முதலியார் சொல்லிவிட்டார். என்ன செய்வேன்! ஜடாதரரின் சம்மதம் கிடைக்காததால்தான், எல்லப்பர் திருமணத்துக்குச் சம்மதிக்கவில்லை என்ற சூக்ஷமத்தை கருணை தெரிவித்தாள், அவளுக்கும் அதுவரையில்தான் தெரியும். சொக்கலிங்கமே சொரூபானந்த ஸ்வாமியாக நாடகம் நடத்தி வந்தது, ஜோதியின் கற்பழித்தது, அதன் விளைவாக தான் பிறந்தது, எல்லப்பருக்கு வளர்ப்பு பெண்ணானது, இவைகள் கருணை

வுக்குத் தெரியாது. ஜடாதரரிடம் சம்மதம் பெறுவதால்
தான், கருணையை எனக்கு மணம் செய்விக்க மறுக்கிறார்
என்று தெரிந்ததும், நான் நேரே, எங்கள் ஊர் சென்றேன்.
ஜடாதரரைக் கண்டேன்; முறையிட்டேன். அவர் முதலிலே
'உத்தரவு' கிடைக்கவில்லை. 'பொருத்தம் இல்லை' என்று
ஏதேதோ சாக்குச் சொன்னார் நான் விடுவதாக இல்லை.
பிறகு, அவருக்கு என்னமோ என்மீது இரக்கம் பிறந்தது.
"கருணையை நீ பெறவேண்டுமென்றால் வைர வியாபாரம்
சொக்கலிங்கம் செட்டியாருடைய சம்மதத்தைப் பெற்று
வா. உனக்குக் கருணைமீதுள்ள காதலையும் அவருடைய
சம்மதத்தையும் எடுத்துக் கூறி, அவரை வேண்டிக்கொள்.
அவர் சம்மதித்தால், உன் கலியாணத்தை நான் முடித்து
வைக்கிறேன்" என்றான், அந்தச் சன்யாசி வேடக்காரன்.
"கருணைவுக்கும் சொக்கலிங்கம் செட்டியாருக்கும் என்ன
சம்பந்தம்? யார் வீட்டுப் பெண்ணுக்கு யாரிடம்போய்ச்
சம்மதம் தரும்படியாகக் கேட்பது?" என்று நான் திகைப்
புடன் கேட்டேன். அப்போதுதான், ஜடாதரன், பூரா விவ
ரத்தையும் என்னிடம் சொன்னான். புரட்டினை மேல் புரட்டுச்
செய்துகொண்டு, பூஜா மடங்களிலே அமர்ந்துள்ள இந்தப்
பொய்யர்களைக் கூண்டோடு தொலைக்க வேண்டும் என்று
எனக்கு ஆத்திரம் பிறந்தது. ஆனால், என் மனமெல்லாம்
கருணைமீது இருந்ததால், புரட்டர்களைப் பிறகு ஒழிப்போம்;
முதலிலே, சொக்கலிங்கம் செட்டியாரின் சம்மதத்தைப் பெறு
வோம் என்று எண்ணி, அவரைப் பலமுறை கண்டு, எனக்கு
அவருடைய சூது அவ்வளவும் தெரியும் என்பதையும் கூறி,
கருணையை, எனக்கு மணம் முடித்து வைக்கும்படி கேட்
டேன், எச்சரித்தேன். செட்டியார் மசியமறுத்தார். ஜடா
தரன் ஒரு முட்டாள்; உன்னிடம் இரகசியத்தைக் கொட்டி
விட்டான். ஆனால், அந்த இரகசியம் உனக்குத் தெரிந்தால்,

என்னை ஆட்டிப் படைக்கலாம் என்று கனவு காணாதே, அசைக்கக் கூட முடியாது! கருணையை உனக்குத் தர முடியாது. நீ ஒரு கிறிஸ்தவன்; என்ன தைரியம் உனக்கு, கருணையைக் கலியாணம் செய்து வை என்று கேட்க'? என்பதாகக் கூறி என்னை ஏசினார். பலமுறை கெஞ்சினேன், சிலசமயம் மிரட்டியும் பார்த்தேன் "சொக்கலிங்கமே சொரூபானந்தன்; சொரூபானந்தருக்கும் ஜோதிக்கும் பிறந்தவளே கருணை, இவைகளெல்லாம் உண்மைதான். ஆனால், இவை உண்மை என்று எடபடி ருஜுப்பிச்துவாய்?" என்று என்னைக் கேட்டான், அந்தக் கள்ளன் 'ஜடாதரனின் சாட்சி இல்லையோ?" என்று நான் சொன்னேன். "என்னுடன் சகலத்திலும் பங்கு கொண்டவனும், என் உதவியால இன்று 'குரு'வாகக் கோலம் கொண்டிருப்பவனுமான, ஜடாதரன் உனக்குச் சாட்சியாகவா வருவான்! பைதயக்காரா! வருவானா? என் கூட்டாளி, பங்காளி! அவன் எனக்கு எதிரியாவானா? ஆனால அவன் கதி என்னவாகும்? அன்று உன்னிடம் ஏதோ சொல்லிவிட்டான் பழைய நாள் சம்பவங்களை. போதையாக இருந்திருபபான். இப்போது போய்ச சாட்சியாக வரவேண்டும் என்று கூப்பிட்டுப் பார்" என்றார் உங்கள் செட்டியார். ஜடாதரன், அதுபோலவே, நான் போய்க் கேட்டபோது, "நான் என்ன பைத்தியக்காரனா?" என்று சொலலி அனுப்பிவிட்டான். இன்று கடைசி முறையாகச் சொரூபானந்த வேடமிட்ட சொக்கலிங்கத்தைக் கேட்டுவிட்டேன், முடியாது என்று கூறிவிட்டான். இதுதான் என் கதை. எனக்கு என்ன உபகாரம் தேவை என்றால, எபபடியாவது, சொக்கலிங்கமே சொரூபானந்தஸ்வாமி என்பதைக் காட்டுவதற்கான ஆதாரம் தேவை. ஜடாதரன் எழுதிய கடிதங்கள் ஏதேனும் கிடைக்குமானால், நமது நாட்டைக் கெடுக்கும் இந்த நயவஞ்சகர்களின் நாடகம் வெளிப்படும்;

மக்கள் தப்புவார்கள்." என்று கூறி, என்னை வேண்டிக் கொண்டான். நான், எப்படி எப்படியோ முயற்சி செய்து பார்த்தேன், ஒரு கடிதம் கூடக் கிடைக்கவில்லை. இருதய நாதன், கருணாவைக்கூட மறந்தான். காவி உடைக் கள்ளர் களை வெளிப்படுத்த வேண்டும் என்று துடிதுடித்தான். இன்று காலை முதல், பல வக்கீல வீடுகளுக்கு இருவருமாகப் போனோம். அதாவது என்னை அழைத்துக் கொண்டு போனான். வக்கீலிடம் சொன்னதும், "நான்சென்ஸ்! ஆதாரம் என்ன? ரூஜூ எங்கே? சாட்சி யார்?" என்றுதான் கேட்டார்கள். சில வக்கீல்கள், "பிரபல வியாபாரி அவர், அவர்மீது, ஆள் மாறாட்டக் குற்றம் சுமத்துவது, எவ்வளவு பெரிய குற்றம் தெரியுமா, ரூஜூவே இல்லாத விஷயம், எவனோ ஜடாதரன் சொன்னான் என்றால், அவனே சாட்சியும் வரமாட்டான் என்கிறாய். கோர்ட்டிலே எழுந்து நின்று, எந்தக் கோமாளியும் இப்படி ஒரு விசித்திரமான வழக்குக்கு வாதாட முன் வருவானா? மான நஷ்ட வழக்குத் தொடரு வார், செட்டியார்" என்று இருதயநாதனையே மிரட்டியும் அனுப்பினார்கள். இருதயநாதன் கூறும் வழக்கு என்ன தெரியுமோ? தெளிவாக இருக்கும்.

வைர வியாபாரம் செய்யும் சொக்கலிங்கம் செட்டி, இருபது ஆண்டுகளுக்கு முன்பு, சாமியார் வேஷம் போட் டுக்கொண்டு, சொரூபானந்த சாமியார் என்று பெயரிட்டுக் கொண்டு, திருநெல்வேலிப் பக்கத்திலே பாமர மக்களை ஏய்த்துப் பணம் பறித்து வந்தான்.

அதுசமயம், ஜோதி எனும் விதவையைக் கற்பழித்தான்; ஒரு பெண் குழந்தை பிறந்தது. ஜோதி இறந்துவிடவே, குழந்தையைப் பக்தியால் ஏமாந்த எல்லப்ப முதலியாருக்கு 'தத்து' ஆக்கினான்.

ஆகவே. சொக்கலிங்கம் செட்டியார், ஒரு புரட்டன், காமுகன், காவி வேடத்திலே உலாவிய கள்ளன், கற்பழித்தவன். அவனுடைய 'சொத்து', மத வேஷமிட்டு ஊரை ஏய்த்துப் பொருள் பறித்ததன் விளைவு.

இவனுடைய புரட்டு முழுவதும், இவனுக்கு உடந்தையாக இருந்து, பிரதம சீடனாகவும் இருந்து, இப்போது 'குரு ஸ்தானம்' வகிக்கும் குடிகாரன் ஜடாதரன் என்ற சடையனுக்குத் தெரியும்.

காருண்ய மிகுந்த சர்க்கார், இந்த வழக்கை விசாரித்து, ஜடாதரனை உண்மையைக் கூறும்படி செய்து, காவி பூண்டு உலவும் கள்ளரின் புரட்டை உலகு அறியச் செய்து, ஏழை மக்கள் இவ்விதமான எத்தர்களுக்கு இரையாகாதிருக்கும்படி பாதுகாத்தருளவேண்டும்.

இதுதான் இருதயநாதன் தொடுக்க விரும்பும் வழக்கு. இதை நடத்திக் கொடுக்கும்படியாகத்தான் இன்று பகல் முழுவதும், எத்தனையோ வக்கீல் வீடுகள் ஏறி இறங்கினோம். அவ்வளவு பேரும் சிரிக்கிறார்கள்; ருஜூ, சாட்சி, ஆதாரம், எடு என்று கேட்கிறார்கள்! ஒரு வக்கீல் சபித்தே விட்டார்.

"அடே, மஹாபாபி! சொரூபானந்தரையா இப்படித் தூஷிக்கிறாய்? நான் அவரைத் தரிசித்து இருக்கிறேன். உனக்கு என்னடா தெரியும், ஞானிகளின் குணம்' என்று இடித்துரைத்தார். புரட்டு நடத்திய சொக்கலிங்கம் செட்டியும் ஒப்புக்கொள்கிறான், உடந்தையாக இருந்த சடையனும் ஒப்புக்கொள்கிறான், இருதயநாதனிடம் பேசும்போது' ஊர் ஒப்புக்கொள்ளாதே! கோர்ட்டிலே கேஸ் நிற்காதே' சொரூபானந்த ஸ்வாமிகள், ஜோதியிலே கலந்ததற்கு ஆதாரம் இருக்கிறது! அந்தச் சமயத்திலே, பிரசங்கம் செய்தவர்களிலே, இந்த ஊர் நீதிபதியும் ஒருவராம்! இந்த நிலைமையிலே,

இருதயநாதன் எப்படி வழக்குத் தொடுக்கமுடியும்? வக்கீலுக்காகத் தேடித் தேடி அலைந்து, ஆத்திரம் அதிகமாகிவிட்டது, இருதயநாதனுக்கு. நேரே, என்னை அழைத்துக்கொண்டு, கருணை வீட்டுக்குப் போனான். அங்கே, எல்லப்ப முதலியார் எதிரிலேயே முழுக் கதையையும் கொட்டினான். "இப்படிப்பட்ட பைத்யக்காரனைக் கலியாணம் செய்துகொள்கிறேன் என்று சொன்னாயே, பாரம்மா, கருணா! பார் இந்தப் பித்தனை" என்று எல்லப்ப முதலியார் கூறினார். கோபம் தலைக்கேறிவிட்டது, இருதயநாதனுக்கு. எல்லப்ப முதலியாரைத் தாக்கினான். அவ்வளவுதான், அவருடைய வேலையாட்கள் கூடி, அடி அடி என்று அடித்தனர். நான் ஓடினேன். அதனால் தப்பினேன். பலமான அடிபட்டுக்கொண்டு இரத்தம் ஒழுக ஒழுக, இருதயநாதன் எல்லப்ப முதலியாரின் பங்களாவை விட்டு வெளியே வந்தான். நான் சென்று, அவனைத் தாங்கியபடி அழைத்து வந்தேன். வருகிற வழியிலெல்லாம்கூட, "ஒரு நல்ல வக்கீல்மட்டும் கிடைத்துவிட்டால் இந்தச் சொக்கலிங்கத்தின் வண்டவாளத்தை ஊரறியச் செய்து, பத்து வருஷம் ஜெயிலுக்கு அனுப்பிவைப்பேன்" என்று கூறிக்கொண்டே வந்தான். கம்பவுண்டர் சார்! இதுவே பரிதாபத்துக்குரிய என் நண்பனின் கதை" என்று எம்பெருமான் கூறி முடித்தார்.

திகைத்துப் போனான் கம்பவுண்டர்.

"என் சார்! உலகிலே இப்படியும் புரட்டுகள் நடக்கின்றனவா?" என்று யோசிக்கிறீர், என்று கேட்டார் எம்பெருமான்.

"இல்லை, சார், இல்லை! காவி போட்ட கள்ளர்கள் பலபேர் இருக்கிறார்கள். ஒவ்வொருவனுடைய கொடிவழிப் பட்டியையும் பார்த்தால் இப்படி ஏதாவது ஒரு புரட்டாகத்தான் இருக்கும். ஏமாறுகிற ஆசாமிகள் இருக்கிறவரையிலே, ஏமாற்றுகிறவர்கள் இருந்துதான் தீருவார்கள். நான் அதற்காக அல்ல யோசித்தது. இருதயநாதன் கூறுவது உண்மையாகத்தான் இருக்கிறது. அவனுக்குச் சொக்கலிங்கத்திடமோ, ஜடையனிடமோ என்ன பகை? பாவம்! ஆனால்

இருதயநாதன் கூறும் உண்மையை, கோர்ட் ஏற்றுக்கொள்ளாதே. வழக்குக்கு ஆதாரமே இல்லை; பொய்யாக சோடிக்கப்பட்ட கேஸ் என்று தள்ளிவிடுவதோடு, இருதயநாதன் மீது மான நஷ்ட வழக்குக்கூடத் தொடுத்துவிடுவார்களே என்பதை எண்ணித்தான் திகைத்தேன்" என்றான் கம்பவுண்டர்.

* * * *

பொழுது விடிந்தது. இருதயநாதன் கண் விழித்தான். களைப்புடன் காணப்பட்டான். டாக்டர் வந்து பார்த்தார்" மருந்து கொடுத்தார். 'ஒரு வாரத்தில் பழைய படி உடலும் நிலை பெறுவான். ஆனால், பழைய நினைப்பு யாவும் அழிந்துவிட்டது கருணா! எல்லப்பமுதலி! சொக்கலிங்கம்! சொரூபானந்தன்! சடையன்! எல்லாம் மனதிலிருந்தே மறைந்துபோய்விட்டன. எம்பெருமானைக்கூட மறந்துவிட்டான். 'பழைய உருவம், உள்ளம், பிரத்யேகமான மாறுதலை அடைந்துவிட்டது. எம்பெருமானைச் சென்று, எவ்வளவோ முயன்று, பழைய நினைவைக் கவனப்படுத்தியபோதும், இருதயநாதனால் எதையும் புரிந்து கொள்ள முடியவில்லை. கண்களில் நீர் ததும்பிற்று எம்பெருமானுக்கு, மண்டையிலே பட்ட பலமான அடியினால் ஏற்பட்ட அதிர்ச்சியிலே, இருதயநாதனுக்கு மூளை கெட்டு விட்டது என்று டாக்டர் கூறிவிட்டார். பித்தம் பிடித்தவனென்று பாட்டு, ஆட்டம், சேட்டை, எதுவும் தெரியவில்லை. இருதயநாதன் தன் எதிரிலே, யாரைக் கண்டாலும், "வக்கீலா, சார்! நீங்கள்?" என்று கேட்பான் வேறு ஒரு பேச்சும் பேசுவதில்லை! திக்கற்ற இருதயநாதனுக்கு எம்பெருமான்தான் உதவி செய்துகொண்டிருந்தான். சாப்பிடுவான், உலாவப் போவான். உலவிவிட்டு, எம்பெருமான் வீடு வந்ததும், "இருதயம்! எங்கே அப்பா போயிருந்தே? என்று எம்பெருமான் கேட்டால். "வக்கீல் வீட்டுக்கு" என்று பதில் கூறுவான் இருதயநாதன்.

யார் வருவார்கள், அவனுக்கு வக்கீல் வேலை செய்ய!

# 1938-40
# ஒரு வசீகர வரலாறு

**முன்னுரை:**

வரலாறு என்றால், மண்டலம், மன்னர், போர், என்று மட்டுமே இருக்கவேண்டுமென்று சட்டம் உண்டா? இல்லை. ஆகவே 1938—40 வரை, உள்ள காலத்திலே நடைபெற்ற ஒரு குடும்ப வரலாறு, இங்கே பொறிக்கப்பட்டிருக்கிறது; அரச குடும்பமல்ல, குடி படைதான்!

**ஆதாரம்:**

இந்த வரலாற்றுக்கு மூலம், ஆதாரம் உண்டா? வரலாறுகளுக்குக் கல்வெட்டு, காவியம், கட்டுக்கதை, புதைபொருள், என்று பல ஆதாரங்களைத் துணைகொள்வதுதானே வாடிக்கை. அதுபோல், இந்த பிரத்யேக வரலாற்றுக்கும் மூலம், ஆதாரம் உண்டு. அவை, மூன்று ஏடுகளிலே காணப்படும் சில வாசகங்கள்.

1. மண்டிக்கடை சொக்கலிங்கம் செட்டியாரின் செலவுப் பட்டிப் புத்தகம்.
2. லேடி டாக்டரின் டைரி.
3. பிறப்புக் கணக்குக் குறிப்பு.

இனி, வரலாறு தீட்டப்படுகிறது. படித்துப் பயன் பெறுக; படமும் காண்க, மனக்கண் கொண்டு.

## 1938

கண்ணுசாமி, தங்கமானவன், சாது; நம்பிக்கைக்குப் பாத்திரமானவன். அவனை நம்பியே கடையின் முழுப் பொறுப்பையும் ஒப்புவித்திருக்கிறேன். காலையில், கண்ணுசாமிதான் கோழியை எழுப்புவான்போலிருக்கிறது! அவ்வளவு விடிய எழுந்திருந்து, குளித்துவிட்டுக் கோபுர தெரி

சனம் செய்துவிட்டு, வீட்டிற்கு ஓடி வருகிறான். சாவிக் கொத்து எடுத்துக்கொண்டு போய், கடையைத் திறந்து வைத்துத், தானே கூட்டிச் சுத்தம் செய்து, நான் உட்காரும் ஆசனத்தைச் சரிப்படுத்திவைத்திருக்கிறான். அவன் அவ்வளவு அக்கறையோடு வேலை பார்ப்பதால்தான், நான், 8 மணிக்கு எழுந்திருக்கிறேன். நிதானமாகப் பல் விளக்கிக் குளித்துவிட்டு, விநாயகரகவலை முடித்துக்கொண்டு, சாவதானமாக டிபன் சாப்பிட்டுவிட்டு, 9, 9-30-க்குக் கடைக்கு நிம்மதியாகப் போக முடிகிறது. கடை வீதியிலே, எத்தனையோ, துண்டு மீசைகளும் துடை கால்களும் இருக்கின்றன! எங்கள் கண்ணுசாமியைப்போன்ற பிள்ளையை கடை வீதியிலே காண முடியாது வளர்த்துவானேன். பலர், அவனை என் மகன் என்றோ, அல்லது மிகவும் நெருங்கிய பந்து என்றோகூடக் கருதுகிறார்கள். அவன் என்னமோ பாபம், நாயுடு வகுப்பு. நான் சொக்கலிங்க செட்டி. பாருங்கள் எப்படியோ அந்தப் பையனுக்கு என்மீது அவ்வளவு வாஞ்சை, அவ்வளவு பிரியம். எனக்கோ ஆண் பிள்ளை இல்லை, ஒரே மகள்; அதுவும் விதவை. எனக்குப் பிறகு கடையைக் கண்ணுசாமிதான் அடையவேண்டும், அவனுடைய யோக்கியதைக்கும் நடத்தைக்கும் ஆண்டவன் அவனுக்குச் சகாயம் செய்யாமல் இருக்கமாட்டார்.

மண்டிக்கடை வைத்திருந்த சொக்கலிங்கம் செட்டியாரின் டைரியில், இதுபோல் எழுதப்பட்டிருந்தது; 1938-ம் வருஷக் குறிப்பிலே என்றே வைத்துக்கொள்ளலாம். ஏன் வைத்துக்கொள்ளலாம் என்று சொல்கிறேன் என்றால், உண்மையில் அவர் இதுபோல் எழுதி இருக்கவேண்டும், ஆனால் எழுதவில்லை. இவ்வளவு எழுதுவதற்குப் பதிலாக, அவருடைய செலவுப் பட்டியிலே ஒரே வாசகம் குறிக்கப் பட்டிருந்தது,

சனம் செய்துவிட்டு, வீட்டிற்கு ஓடி வருகிறான். சாவிக் கொத்து எடுத்துக்கொண்டு போய், கடையைத் திறந்து வைத்துத், தானே கூட்டிச் சுத்தம் செய்து, நான் உட்காரும் ஆசனத்தைச் சரிப்படுத்திவைத்திருக்கிறான். அவன் அவ்வளவு அக்கரையோடு வேலை பார்ப்பதால்தான், நான், 8 மணிக்கு எழுந்திருக்கிறேன்; நிதானமாகப் பல் விளக்கிக் குளித்துவிட்டு, விநாயகரகவலை முடித்துக்கொண்டு, சாவதானமாக டிபன் சாப்பிட்டுவிட்டு, 9, 9-30-க்குக் கடைக்கு நிம்மதியாகப் போக முடிகிறது. கடை வீதியிலே, எத்தனையோ, துண்டு மீசைகளும் துடை கால்களும் இருக்கின்றன! எங்கள் கண்ணுசாமியைப்போன்ற பிள்ளையை கடை வீதியிலே காண முடியாது வளர்த்துவானேன். பலர், அவனை என் மகன் என்றே, அல்லது மிகவும் நெருங்கிய பந்து என்றேகூடக் கருதுகிறார்கள். அவன் என்னமோ பாபம், நாயுடு வகுப்பு. நான் சொக்கலிங்க செட்டி. பாருங்கள் எப்படியோ அந்தப் பையனுக்கு என்மீது அவ்வளவு விஞ்சை, அவ்வளவு பிரியம். எனக்கோ ஆண் பிள்ளை இல்லை, ஒரே மகள்; அதுவும் விதவை. எனக்குப் பிறகு கடையைக் கண்ணுசாமிதான் அடையவேண்டும், அவனுடைய யோக்கியதைக்கும் நடத்தைக்கும் ஆண்டவன் அவனுக்குச் சகாயம் செய்யாமல் இருக்கமாட்டார்.

மண்டிக்கடை வைத்திருந்த சொக்கலிங்கம் செட்டியாரின் டைரியில், இதுபோல் எழுதப்பட்டிருந்தது; 1938-ம் வருஷக் குறிப்பிலே என்றே வைத்துக்கொள்ளலாம். ஏன் வைத்துக்கொள்ளலாம் என்று சொல்கிறேன் என்றால், உண்மையில் அவர் இதுபோல் எழுதி இருக்கவேண்டும், ஆனால் எழுதவில்லை. இவ்வளவு எழுதுவதற்குப் பதிலாக, அவருடைய செலவுப் பட்டியிலே ஒரே வாசகம் குறிக்கப்பட்டிருந்தது,

கொண்டு திவ்ய தேஜஸோடு இருக்கிறான். தீர்க்காயுசாக இருக்கவேண்டும். பகலும் இரவும் பாடுபட்டுப் பதினைந்து ரூபாய் சம்பாதிக்கிறான். அதிலே பதினைந்து தம்படிகூட அவன் எடுத்துக்கொள்வதில்லை. அந்தப் பணத்தை வாங்கும்போதே தனி இன்பம் மீனாட்சிக்கு. அவள் பணத்தைப் பார்க்காதவளா! கத்தை கத்தையாக நான் நோட்டுகளை வீசி எறிவேன், மீனாதான் பெட்டியிலே அவைகளை எடுத்து வைப்பாள். அப்படிப் பணத்தோடு பழகியவள்தான் மீனாட்சி என்றாலும், என் பையன் கொண்டுவரும் 15-ரூபாய் அவளுக்குப் பத்தாயிரமாகத் தோன்றுகிறது "கண்ணு இன்று சம்பளம் வாங்கிக்கொண்டு வந்தான்" என்று, சிந்து பாடுகிறாள். இருக்கத்தானே செய்யும்! நான் முன்பு அவளிடம் வீசிய நோட்டுகள், என் சம்பாதியப் பணமா என்ன அவளுக்குக் களிப்பு பிறக்க? வீடோ தோட்டமோ, நஞ்சையோ, நகையோ, எதையோ ஒன்றை விற்றுச் செலவு செய்துவிட்டதுபோக மிகுந்த பணத்தை மீனாட்சியிடம் கொடுத்திருப்பேன். அவளுக்குச் சந்தோஷம் எப்படி இருக்கமுடியும்? கண்ணன் கொண்டுவந்த பதினைந்து ரூபாயோ, அவன் பாடுபட்டுச் சம்பாதித்தது. குடும்பத்துக்கு உயிர் ஊட்டுவது! என்னைப் பட்டை நாமத்துடனும் பஜனைப் பாட்டுடனும், பிச்சை எடுக்கச் சொல்லாமல் தடுத்த தனம்! கண்ணுசாமியின் குணத்தை அவன் தாயும் நானும் மட்டுமா புகழ்கிறோம். அவன் தீர்க்காயுசுடன் இருந்தால், நான் தோற்றுவிட்ட செல்வமெல்லாம திரும்பவும் கிடைத்துவிடும் என்று கோபால ஜோதிடர்கூடச் சொல்லியிருக்கிறார். என் மகனுடைய நற்குணத்தைக் கண்டுதானோலேதான், அவனுடைய முதலாளி இந்த மாதம் முதல் 5-ரூபாய் சம்பளத்தில் கூட்டி இருக்கிறார். அவர் மகாராஜனாக வாழவேண்டும். இனி அவர் தரும் இருபது ரூபா

யிலே மாதம் இரண்டு ரூபாயாவது, கண்ணுசாமியின் கலியாணத்துக்கென்று ஒதுக்கி வைக்க வேண்டும். கண்ண னுக்கு வயது 22-ஆகிறது. இதே வயதிலே, எனக்கு முக்கிய மான திவ்யக்ஷேத்திரங்களிலே எந்தெந்த "ரகம்" கிடைக் கும் என்பது தெரியும். அப்படித் தறுதலையாக இருந்தேன். கண்ணன் ஞானஸ்தன். வீண்வழி போகாதவன். அவனை நீதான் ரட்சிக்கவேண்டும், மேலும் மேலும் விருத்திக்குக் கொண்டு வரவேண்டும். இப்போது, எப்படி, கடை முத லாளி சொக்கலிங்கம் செட்டியார், கண்ணனிடம் விசுவாச மாக இருக்கிறாரோ அதேபோல என்றைக்கும் இருக்க வேண்டும். அவருக்கும் வியாபாரம் பெருகவேண்டும், இலாபம் வளரவேண்டும். அவருக்குப் பணம் ஏராளமாக இருக்கிறதேயொழிய மனநிம்மதி இல்லை, பாவம் கிளி போன்ற ஒரே மகள், விதவையாகிவிட்டாள். கல்யாணியை எண்ணிக்கொண்டால், கண்களிலே அவருக்கு நீர் தாரை தாரையாக வழியும் என்று கண்ணு சொல்லியிருக்கிறான். என்ன செய்வது! அது அவரவர் விதிவசம்!—"

இவ்வளவும், ஆதிநாராயண நாயுடு அவசியம் எழுதி இருக்கவேண்டும், டைரியில். பங்கஜவல்லித் தாயார் கோயிலிலே, கண்ணுசாமி பேரால் ஒரு அர்ச்சனையும், சொக்கலிங்கம் செட்டியார் பேரில் ஒரு அர்ச்சனையும் செய்துவைத்துப் பிரசாதம் பெற்றுக்கொண்டு வந்தார். அந்த இரண்டு அர்ச்சனைகளிலே, ஏழெட்டு பக்கங்களில் எழுதவேண்டிய குறிப்புக்கு மேலான ஆழ்ந்த கருத்துகள் இருந்தன.

1938-ல், கலியாணிக்கு எழுதுவதற்கு ஒன்றும் கிடைக்கவில்லை. தாங்கமுடியாத துக்கத்தை அந்தத் தையல் எப்படி எழுதமுடியும், எழுத்துக்கள் ஏது! பூ இழந்து புலம்பிக்கிடந்த பூவைக்கு, மனதிலே மூண்டிருந்த எரிமலை,

நெருப்பைக் கக்கியபடி இருந்தது. அந்த நிலையிலே அவள் தன் நெஞ்சில் உற்றது என்னவென்று எங்ஙனம் தொகுத்து எழுதமுடியும்? ஒரு விநாடி அவள் கண்முன், இந்த உலகம் முழுவதுமே அஞ்ஞானம் குடிகொண்ட ஒரு அக்ரம புரியாகத் தோன்றும். சில சமயம் அவள் கண்முன், உலகமே இன்பம் என்ற கணவனை இழந்துவிட்ட விதவைக் கோலத் தில் இருப்பதாகத் தோன்றும். ஆடிப்பாடிச் சுகித்திருக்கும் ஆடவர் பெண்டிர் அனைவரும் நெடுங்கால விரோதம் பூண்டு தன்னைப் பழிதீர்க்கக் கேலி செய்யும் பாதகர்களாகக் கல்யாணியின் கண்களுக்குத் தோன்றினர். எப்படித்தான் பதினெட்டு வயதுப்பெண் கல்யாணிக்கு, மணமான மூன்றும் மாதம் மார்வலியால் மணாளன் இறந்து போன துக்கம் மாறும்? அவள் மனம் பட்டபாடு, எடுத்துக் கூறக்கூடிய தன்று, அவளாலும் எழுதிக் காட்டக் கூடியதல்ல. ஓவியக் காரனோ கவிஞனோ முயன்றாலும் தோற்றுத்தான் போகவேண்டும், அந்த சோகச் சித்திரத்தைத் தீட்ட முடியாமல். கல்யாணி அதிகம் படித்தவளல்ல, பள்ளியிலும் சரி, உலகிலும் சரி!

## 1938

கண்ணுசாமி தங்கக் குணமுடையவன். என் வீட்டுக் காரருடைய விசாரம், அவருக்கு இருந்த வியாபாரத் திறமை யைக்கூடக் கெடுத்துவிட்டது. கல்யாணி புருஷன் இறந் தான் என்ற தந்தி வந்ததும் கதறியதைக் கண்டபோது, அவருடைய மூளையே சிதறிவிடும் போலாகிவிட்டது. என் தலையிலே இந்தப் பேரிடி விழ நான் யாருக்கு என்ன தீங்கு செய்தேன்! பகவத் கைங்கரியத்தை மறந்தேனோ? தருமம் தவறி நடந்தேனோ? பொய் பேசித் திரிந்தேனோ? என் ஒரே மகள் விதவையானளே இனி எனக்கு வீடு வாசல் ஏன், மாடு மனை எதற்கு, கடையும் கணக்கும் யாருக்கு வேண்டும்,

பேசாமல் நான் தேசாந்தரியாகிவிடப் போகிறேன். வீடு நமக்குத் திருவாலங்காடு, உண்டு கையில் திருஓடு என்ற மொழிப்படி என்றெல்லாம் அவர் அழுதபோது, கண்ணுசாமிதான், ஆறுதல் கூறினான், வீட்டையும் கடையையும் கவனித்துக்கொண்டான், அவனுடைய உதவியும் ஆதரவையும் இல்லாவிட்டால் அவர் உயிர் போய்விட்டிருக்கும். அந்தப் பிள்ளையாண்டானுக்குப் பாவம், எங்கள் குடும்பத்தினிடம் அவ்வளவு அக்கரை. சொந்தப் பிள்ளைகளெல்லாம் குடும்பச் சொத்தைப் பாழாக்கிக்கொண்டு கெட்டுக்கிளை வழியாகின்றன. கண்ணன், நம்ம ஜாதியா? குலமா? இல்லை! ஆனாலும், அவனுக்கு எங்கள் குடும்பத்தினிடம் இருக்கும் அன்பு; எங்கள் உறவின்முறையாருக்குக் கடுகுப் பிரமாணமும் கிடையாது. பொறாமையும் வெப்பும் எண்ணமும் கொண்டவர்கள் எங்கள் பந்துக்கள். எதிரில் [illegible] தேன் ஒழுகும். தலைமறைவாகவோ தாறுமாறுதான் பேசுவார்கள். இப்படிப்பட்ட சனியன்கள் நமக்குப் பந்துக்களாம்! கண்ணுசாமியின் கால்தூசுக்குக்கூட [illegible]டார்கள்!! என்று சீதாலெட்சுமி அம்மையார் தமது டைரியிலே எழுதிவைக்கவில்லை, அம்மாவிடம் டைரியும் கிடையாது. டைரி வேண்டுமானால்கூடக் கிடைத்துவிடும், கிடைத்தால்மட்டும் என்ன! சீதாலெட்சுமி அம்மைக்கு எழுதவே தெரியாது. எண்ணம், எழுத்தறிவு இல்லாமலும் ஏற்படுகிறதல்லவா! ஆகவே எழுதாத எண்ணங்களைச் சீதாலெட்சுமி, ஒவ்வோர் நாளும்,

"தம்பீ! போய்விடாதே இதோ ஒரே ஒரு தோசை சாப்பிட்டுவிட்டுப் போ"

"இவ்வளவு காலையிலே எழுந்திருக்கிறாயேடா கண்ணு, உனக்கு உடம்புக்கு ஜுரம் கிரம் வந்தால் என்னடப்பா செய்வது"

"பொரிவிளங்காய் உருண்டை கொடுத்தனுப்பினேனே கடைக்கு, நீ சாப்பிட்டாயா, கடைவேலையில் அதைக்கூட மறந்துவிட்டாயா" என்று ஏதாவது அன்புமொழி பேசுவதன் மூலம் சீதாலெட்சுமி அம்மையார் தமது டைரியை எழுதிக்கொண்டிருந்தார்.

1938-ல் கண்ணுசாமியின் டைரி, சுருக்கமாகவே இருந்திருக்கவேண்டும்; முதலாளிக்கு அடங்கி நடக்க வேண்டும். ஊருக்குப் புயர்ந்து வாழவேண்டும். குடும்பத்தைக் காப்பாற்றவேண்டும். கடைவீதியிலே கண்ணியமானவன் என்று பெயரெடுக்க வேண்டும், கண்ணுசாமி ஓதிவந்த நாலடியார் இது. அவனுடைய கண்களுக்கு, முதலாளி சொக்கலிங்கம் செட்டியார், "பரிதாபத்துக்குரிய, தர்ம குணம் படைத்த, பரமசாது" வாகத் தெரிந்தார். சீதாலெட்சுமி அம்மையார், கண்ணுசாமியின் கண்களுக்குத் தாயாகவே இருந்தார்கள். கல்யாணியோ? அவளை அவன் சரியாகப் பார்த்ததில்லை. ஆம்! பார்க்காததால்தான் 1938-ம் வருஷ டைரியில், இப்படி இருந்திருக்கவேண்டும் என்று கூறக்கூடிய விதத்திலே விவகாரம் இருந்தது!!.

## 1939

1938-ல் இருந்த உலகுக்கும் 1939-ல் இருந்த உலகுக்கும் எவ்வளவு மாறுதல்! அழிந்த ராஜ்யங்கள்! அரண்மனை விட்டு வெளியேறிய மன்னர்கள்! உடைந்துபோன ஒப்பந்தங்கள்! ஓய்ந்துபோன ராஜதந்திரிகள்! தேய்ந்த கனவுகள்! தீய்ந்துபோன திருநகர்கள்! இப்படிப் பலப் பல பத்திரிகைகள் மூலம் இவைகள் பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்பட்டு, பொதுமக்கள், வாழ்க்கையின் தரம் மாறுவதைக் கண்டு, பயங்கரமான போராட்டத்தின் மத்தியிலே நாம் வாழ்கிறோம் ஆகவே வதைகிறோம், என்பதைத் தெரிந்துகொண்டனர். ராஜ்ய ரசாபாசங்களும், அரசு

களின் அல்லல்களும், பண்டங்கள் பாழாவதும், இவை களுக்கான காரணங்களும், ஜனங்களுக்குத் தெரியும். அதி லும் சென்னை மக்களுக்குப் பத்திரிகைகளுக்குக் குறைவா? உலகமே, மாலை ஐந்து மணிக்குச் சென்னை மக்களின் கண் முன் வந்து நின்றுவிடுறது. அந்தக் கைங்கரியத்தைச் செய்யத்தான் ஆசிரியர்கள் இருக்கிறார்களே! சென்னை மக்கள் உலகநிலையைத் தெரிந்துகொள்ளும் வேலையிலே முனைந்திருந்தபோது, மண்டி சொக்கலிங்கம் செட்டியாரின் 1939-ம் ஆண்டுக் குறிப்பு ஏட்டைப் பற்றியா அக்கறை கொள்வார்கள்? ஆனால் மக்கள் மனதிலே உலக நிலைகண்டு மருட்சி ஏற்பட்டதற்கு எள்ளளவும் குறைந்ததல்ல, சொக்கலிங்கம் செட்டியாருக்குக் கண்ணுசாமியின் நடவடிக் கையிலே ஏற்பட்ட மாறுதலைக் கண்டு உண்டான மருட்சி. அவன், பீரங்கி துப்பாக்கி தூக்கிக்கொண்டு செட்டியாரின் சித்தத்தைச் சிதைக்கவில்லை. அவனுடைய படைஎடுப்பு முறையே "சத்தியின்றி இரத்தமின்றி" இருந்தது. கண் இருக்கக் கட்கம் தேடுவார் உண்டா, காதற் போரில்? அதி லும், கல்யாணி குருடல்ல! கண்ணுசாமி குறள் அறிந்த வன்! குறளாசிரியரோ எவ்வளவோ கல்யாணிகளையும் எத் தனையோ கண்ணுசாமிகளையும் பார்த்த பிறகுதானே,

"கண்ணோடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனுமில"

என்று எழுதியிருந்தார்! அந்தக் கண்ணோடு கண், கூணத் தலைப்படும் நேரத்திலே கண்டுவிட்டார் செட்டியார். சோகித் தார், மருட்சி அடைந்தார். தங்கமான நமது கண்ணுசாமி ஏன் மாறிவிட்டான்? மாசு மருவற்ற அவன் மனதுமா கெட்டுவிட்டது? என்று துக்கித்தார். அவன் மட்டுமென்ன துக்கப்படாமலா இருந்தான்? எவ்வளவு அழகு! அழகு தங்கும் பருவ அழகுகொண்டுள்ள அங்கங்கள்! அங்கங்களைத்

தாங்கிக்கொண்டு தங்கக்கொடி! அப்படிப்பட்ட கல்யாணிக்குக் கணவன் இல்லை! கைம்பெண்! நிலவுக்குத் திரையிட்டு வைப்பதுபோல, புனுகு ஜவ்வாதைச் சிமிழியில அடைத்து மூடி வைப்பதுபோல, கல்யாணியின் அழகைக் கட்டுப்பாடு என்ற பெட்டிக்குள் மூடி வைத்திருக்கிறார்கள். பெட்டிப் பாம்புபோலவா படுத்துக் கிடக்கும் இச்சை! அது பெட்டிக்கு அடியிலே சிறு துவாரம் செய்துகொண்டு வெளியே வந்துவிடுகிறது. சொத்து இருந்தும், சொர்ணபிம்பப் போன்ற உருவம் அமைந்திருந்தும், கல்யாணிக்குக் கணவன், இல்லை! உலகிலே ஆண்களா இல்லை? கல்யாணியைக் கண்டும் கவலை கொள்ளாத ஆடவன் குருடனாகவன்றோ இருக்கவேண்டும்! அவளைப் பார்க்கப் பார்க்க, என் மனம் காலை ஏற ஏற ஜுரவேகம் அதிகரித்துக்கொண்டே போகும் காய்ச்சல்காரன்போலாகிவிடுகிறது என் நிலை — என்று கண்ணுசாமியும் துக்கித்தான், சோகமுற்றான்.

எப்போதாவது ஓர் சமயம் கல்யாணியின் சிரிப்பு சிகிச்சை முறையாகப் பயன்படும். மற்ற நேரங்களில் அவன் மனக் குரங்கை அடக்கப், பார்த்துப் பார்த்துத் தோற்றுக் கொண்டிருந்தான். கடையிலே கவனம் குறைந்ததற்குக் காரணம், கல்யாணி! முதலாளியின் கோபம் கண்ணுசாமி மீது பாயும்படி நேரிட்டதற்குக் காரணம், கல்யாணி! டைரி எழுதுவதற்குப் பதிலாகச, செட்டியார்,

கண்ணுச்சாமிக்குச் சம்பளத்தில் இரண்டு ரூபாய் குறைக்கவேண்டியது.

என்று வழக்கமான வசன கவிதையை, அதன் பொருள் தெரிந்தோர் தெரிந்துகொள்ளட்டும் என்ற முறையிலே எழுதிவிட்டார்.

ஆதிநாராயண நாயுடு. "என்னமோ போறுத வேளை" என்ற பேச்சால் திருப்திப்படலானார், சீதாலெட்சுமி,

"அந்த இரண்டு ரூபாயினால் உங்களுக்கென்ன பிரமாதமான செல்வமா ஏற்பட்டுவிட்டது. ஏழை அவன்; அவன் மீது பாய்கிறீரே" என்று வக்கீல் வேலைசெய்து பார்த்தாள், வழக்கு தள்ளுபடியாகிவிட்டது; அப்பீல் கோர்ட் இல்லை!!

1938-ல் குணவானாக இருந்த கண்ணுசாமி 1939-ல், அதாவது ஒரே வருஷத்திலே, தனக்குச் சோறிடும் "தர்ம தாதா" விற்குத் துரோகம் செய்யும் துர்த்தனாக மாறிவிட்டான்! ஊரிலே நம்மைப்போல எத்தனையோ, விதவைகள். நமது தலை எழுத்துப்போலாகிவிட்டது, என்ற பேச்சினாலும் நினைப்பாலும், பருவ உணர்ச்சியைக் கட்டுப்படுத்திப் பார்த்த பரிதாபத்துக்குரிய கல்யாணி, "நான் என்ன செய்யட்டும்? நானும் எவ்வளவோ முயன்றுதான் பார்த்தேன், முடியவில்லை. இதிலென்ன அதிசயம்! முல்லை, கொடியிலே பூத்திருக்கும்போது, சாலையிலே நடப்பவன் அந்த நறு மணத்தை ரசிக்கிறான், அதற்கு முல்லை என்ன செய்வது! கண்ணுசாமியை இங்கேஏன் உலவவிட்டார்கள்? காந்தத்தை ஏவிவிட்டு, இரும்புக்குச் சட்டம் இடுவதா? முடியுமா? வீணையை மீட்டிவிட்டு, இசை எழும்பக்கூடாது என்று கட்டளையிடுவதா? முட்டாளல்லவா செய்வான் அதனை—" என்றெல்லாம், வாதாடக்கூடிய வக்கிரபுத்திக்காரியாகிவிட்டாள் கல்யாணி, ஒரே வருஷத்திலே! அவள் பாபம் உண்மையிலே என்ன செய்வாள். சொக்கலிங்கம் செட்டியார், இச்சை நசித்துக்கொண்டே போகும் பருவத்தினர். ஆகவே, அவருக்கு உலக மாயை, வாழ்க்கையின் அனித்தியம், காமவிகாரத்தினால் வரும் அபசாரம் ஆகியவைகள், மனதிலே குடிகொள்ள முடிந்தது. கல்யாணியோ, அலை மோதிடும் மனம், அதை அடக்க முடியாதபருவம், நாளுக்கு நாள் அலையின் வேகம் அதிகரித்துக்கொண்டிருந்தது—குற்

றம் அவனுடையதா? சேச்சே! அவள் என்ன செய்வாள்? பருவம் அவளைப் பணிய வைத்தது.

கடை குமாஸ்தாவாகக் கண்ணுக்குத் தெரிந்த கண்ணு சாமி, "அப்பாவுக்கு மிக்க வேண்டியவர்" என்ற ரூப மெடுத்து, 'காலையும் மாலையும் கனியோ மலரோ, கடையி லிருந்து கொண்டுவந்து தரும் பக்தன்' வேடத்தில் தோன்றி, கடையில் காதலனாகவே காட்சியளித்துவிட்டான். அவள், வீதி வழியிலே போய்க்கொண்டிருந்தவனைக் கைப்பிடித்து இழுத்துவரவுமில்லை. அவள் இருக்கும் இடத்துக்கு அவனை அனுப்பியது, அவள் தந்தைதான்! அவன் வசந்தத் தின் தூதனாக வந்தான். அந்த வடிவழகியின் மனதிலே இடங்கொண்டான். அதற்கு அவள்மீது குறை கூறிப் பயன் என்ன?

அந்த ஒரு வருஷத்திலே நடந்ததனைத்தும் அவனுக்கு நன்றாக நினைவிருந்தது.

1938-ல், தங்கமானவன், சாது! 1939-ல் அவனே தறு தலை, போக்கிரி!—இது செட்டியாரின் கணக்கு. அவர் கணக்குப்படி பார்த்தால், 1938-ல் நம்பிக்கைக்குப் பாத்திர மானவனாக இருந்த கண்ணுசாமி, 39-ல் நயவஞ்சகனாகிவிட் டான். அந்த ஒரு வருஷத்தில் புத்திசாலி என்று புகழ்ந்த செட்டியாரே, அதே ஆசாமியை மூட்டாள் என்று தூற்றி னார். பைத்யக்காரன், ஒன்றும் அறியாதவன் என்று எந்தக் கண்ணுசாமியைச் சொன்னாரோ; அதே பேர் வழியை, கைகாரன், ஆஷாடபூதி என்று திட்டலானார். வா, தம்பீ உள்ளே! என்று அன்போடு 1938-ல் அழைத்தவர், 1939ல் அவனாக உள்ளே நுழைந்தால், "போடா கழுதே! வெளியே போய் இரு"—என்று விரட்டலானார். இப்படி அவர் மாறி விட்டார். அதுபோலவேதான் கல்யாணியும் மாறிவிட் டாள். மாறுதல் சகஜந்தானே!

76070 

ஆண் பிள்ளைகள் எதிரிலே நாம் போவானேன்—என்று இருந்தாள் முதலில், செட்டியார்தான் "அட யாரும் இல்லேம்மா. நம்ம கண்ணுசாமி" என்று தைரியம் கூறினர். கண்ணுசாமியிடம் அவள் பேசுவதே கிடையாது; செட்டியாராகவேதான் பேசும் வழக்கத்தை உண்டாக்கிவைத்தார்! கடையிலே அவர் உட்கார்ந்துகொண்டு, வீட்டுக்குக்கண்ணுசாமியை "கல்யாணிக்குக் காரப் பலகாரம் என்ன வேண்டும் என்று கேட்டுக்கொண்டு வா" என்று சேதி சொல்லி அனுப்புவார். அவள் ஏதோ வேண்டும். வேண்டாம் என்று இரண்டே பேச்சுப் பேசி அவனை அனுப்பிவிடவேண்டும் என்றுதான் நினைத்தாள் முதலில். ஆனால் அவனுடைய பார்வையிலே ஒரு பாசம் இருந்தது. பேச்சிலே ஒரு மயக்க மருந்து கலந்து இருந்தது. ஆகவே, கல்யாணியின் அகமும் முகமும் மலரத் தொடங்கிற்று. அதற்கு அவள் என்ன செய்வாள்? அவளைக் கேட்டால் தெரியும், யார்மீது குற்றம் என்பது. கல்யாணி கிடக்கட்டும் அவளுடைய கண்களைக் கேளுங்கள், "இப்படி நீ அக்ரமத்தின்மீது ஆசைப் படலாமா? காம இச்சை தகுமா? கண்ணுசாமியிடம் ஏன் காதலைச் சொரிந்தாய்?" என்று கேட்டுப் பார்த்தால் தெரியும்! பேச முடியாது, கண்ணால்! ஆனால் இரண்டொரு முத்து உதிரும். அந்தக் கண்ணீரின் பொருள் என்ன தெரியுமா? பைத்யக்கார உலகமே! பழிகார உலகமே! நான் திடீரென்று தாவிக் குதித்தேன், அந்தத் தங்கரூபன்மீது? இன்று, என்னிடம் தாபம் ததும்பிக் கிடப்பதைக் காண்கிறாயே. இதே கண்களிலே,முதலிலே, ஏன் இதே கண்ணுசாமி அடிக்கடி நம்மை ஒருவிதமாகப் பார்க்கிறான் என்று கோபம் குடிகொண்டிருந்தது. அந்தக் கோபத்தை அவன் சட்டை செய்யாமல் இருந்தான், என்ன துணிவு இவனுக்கு என்று கோபத்தை மேலும் கக்கினேன். அவனை அது சுடவே

இல்லை. அவன் முன்போலவே தனது அன்பை அபிஷேகித்த படி இருந்தான், எது வந்தாலும் வரட்டும் என்ற துணிவுடன் இருக்கிறான், பாவம். அவனுக்கு அவ்வளவு ஆசை இருக்கிறதுபோலும் என்று எனக்குத் தோன்றிற்று. அதனால் பரிதாபம் பிறந்தது. அந்த உணர்ச்சியை அவன் பயன்படுத்திக்கொண்டான். அது கண்டு நான் பயத்தைப் பொழிந்தேன். அவன் புன்சிரிப்புடன் என்னைப் பார்க்கலானான். செ! அவனுக்குள்ள தைரியத்தில் ஆயிரத்தில் ஒரு பாகம்கூட நமக்கு இல்லையே, நாம் என்ன கோழையா, என்ற நினைப்பு பிறந்தது. அப்போது சபலம் குடியேறிவிட்டது. சபலம் வெகு விரைவில் பிரேமையைக் கூட்டி வந்து குடியேறச் செய்துவிட்டது. இப்போது தாபம் என்னிடம் ததும்பிக் கிடக்கிறது. இதை அறியாமல் என்னைக் கண்டிக்கிறாயே கன்னெஞ்சு படைத்த உலகமே! கைம்பெண்ணின் கண், எவ்வளவு போராட்டங்களுக்குப் பிறகு, தாபத்துக்கு இடமளிக்க நேரிட்டது என்பதை அறிவாயா? உனக்கென்ன தெரியும்? தெரிந்தால்கூட நீ ஊமை! கேள்வி கேட்கமட்டும் உனக்கு வாய் உண்டே தவிர, பதில் சொல்லவேண்டிய அவசியம் வந்ததும் நீ ஊமையாகிவிடுகிறாய்! உன்னிடம் எனக்கென்ன பேச்சு!"—என்பதுதான் அந்தக் கண்ணீரின் பொருள். அறிந்தோர் அறிவர்; அறியாதவர் பலர், எனினும் பயனில்லை அவரால். அந்தக் கண்களை அதே நேரத்தில கல்யாணியின் கரம் துடைப்பது காண்பவர்கள். "கண்களைக் கசக்கிக் காட்டுகிறாள் கள்ளி!" என்று வழக்கமான பேச்சு பேசுவர். அவர்கள் அறியார்கள், அவளுடைய கரம், கண்களைத் துடைப்பதல்ல அது! மெதுவாகத தடவிக் கொடுத்துக்கொண்டு, தன் கஷ்டத்தை எடுத்துக் கூறி, கல்யாணியின் கண்களுக்கு ஆறுதல் கூறும் அழகான காட்சி அது என்பது.

"கலங்காதே கண்ணே! நீ உனக்குத்தான் இந்தக் கஷ்டம் ஏற்பட்டது என்று நினைக்கிறாய். பைத்யக்காரி! நான் பட்ட கஷ்டம் உனக்குத் தெரியுமா? கேளடி கதையை! அன்றொரு இரவு அவர் என்னைத் தொட்டார், முன் அறிவிப்பு இன்றி. அப்போது அவரை உதறித் தள்ளியதை, பிறகு ஓர் நாள் உள்ளே தாய் இருக்கிறாள் என்பதைச் சுட்டிக் காட்டும் சிகப்புக் கொடியாக மாறி, அதற்குப் பிறகு சத்தம் செய்யாமல் வா என்று வாயைப் பொத்திக் காட்டத் தொடங்கி, போகாதே இரு, இதோ வந்துவிடுகிறேன் என்று சைகை செய்து, உன்னை என்ன செய்கிறேன் பார், என்று விளையாட்டுக்கு மிரட்டும் குறி காட்டி பிறகு அவரை அணைத்து ஆனந்தம்பெற்று, இன்று அடிவயிற்றைத் தடவி அல்லற்படுகிற கதை உனக்குத்தான் தெரியுமா?"—என்று கல்யாணியின் கரங்கள் கூறி, கண்களுக்குத் தேறுதல் தரும் உபகார காரியம் அது. உலகின் கண்ணுக்கு, அது, கண்ணைக் கசக்கும் செயலாகத் தெரிகிறது. உலகம் அதற்கு என்ன தெரியும் உள்ளத்தைப்பற்றி!

"யாரோ ஆம்பளே வருகிறாப்போலிருக்கு" என்று கல்யாணி அச்சத்தோடு கூறிக்கொண்டிருந்தாள். செட்டியார் தான், "யாருமில்லையம்மா! நம்ம கண்ணன்! அசட்டுப் பெண்ணே! அவனைப் பார்த்துவிட்டு என்னம்மா வெட்கம்! நம்ம கடைப் பையன்!" என்று தைரியம் சொன்னார். அந்தத் தைரியம் வளர்ந்த பிறகுதான் தெருவாயற்படி அருகே காலடிச் சத்தம் கேட்டதும், "யார் வருவது?" என்று சொக்கலிங்கம் செட்டியார் கேட்டு முடிப்பதற்குள், கல்யாணியால், "யாராக இருக்கும்? நம்ம கண்ணுசாமியாகத் தான் இருக்கும்" என்று கூற முடிந்தது. காலடிச் சத்தமே அவள் செவிக்கு ஒரு இன்பம்தரத் தொடங்கியவேளை வந்துவிட்டது. அவள் என்ன செய்வாள்! அதற்கும்

அடுத்த கட்டத்திலே, கண்ணுசாமி பூனைபோல ஓசை செய்யாமல் வருவதும், தன் ஒய்யாரியுடன் குலவுவதும், ஆள் அரவம் கேட்டதும் மெள்ள நழுவிவிடுவதும், "யாரோ வந்ததுபோலச் சத்தம் கேட்டதே யாரம்மா அது?" என்று தாய் கேட்க, கல்யாணி, "யாரும் இல்லம்மா! நம்ம கண்ணு சாமிதான்" என்று சொந்தம் பாராட்டிப் பதில் கூறுவது மாக நிலைமை இருந்தது. இவ்வளவுக்கும் காரணம், கல் யாணியா? இந்த நிலைமையைக்கண்டும், வளரவிட்ட, நிலைமை உண்டாகாமலே தடுக்கத் திறமையற்றுப்போன செட்டியா ரல்லவா இவ்வளவுக்கும் காரணம்!! கல்யாணி அப்படி ஒன் றும் தொட்டதும் துவண்டுவிடவில்லை; கண்ணுசாமியும் கண்டதும் காதல் கொண்டு, கைப்பிடித்து இழுத்துவிட வில்லை. இருவர் மனதிலும் பலமான போராட்டம், பல இரவுகள்!

"நீ விதவை! தாலி இழந்தவள், தெரிகிறதா? தப்பு தண்டாவிலே மாட்டிக்கொள்ளாதே. உனக்குமட்டுமல்ல, குடும்பத்துக்கே கெட்ட பெயர் உண்டாகும்" என்று தலை யணையின் வலது பக்கம் கல்யாணியின் வலது காதிலே உப தேசம் செய்யும். இடதுபுறத்திலே இருந்துகிளம்பும் குரலோ, "உன் அழகும் இளமையும் வீணுகப் போகிறது. வாலிப விருந்தை உண்ணுமல வாடுகிறுய். உன் கணவன் இறந்துவிட்டான், நீ என்ன செய்வாய் அதற்கு! போனவன் உன்னுடைய உணர்ச்சியையும் கவர்ச்சியையும் பறித்துக் கொண்டா போய்விட்டான். இல்லையே! தலை சீவிக்கொண்டு நிலக்கண்ணுடியிலே பார் உன் அழகை! அதை அவனுக்கு அர்ப்பணம் செய்! உன்னை அவன் உள்ளன்போடு நேசிக்கி ருன்" என்று அது பேசும். வலதுபுறம் உபதேச மொழி, இடதுபுறம் இன்பத் தூது மொழி, என்ற வகையில், தலை

யணை, கல்யாணிக்குப் பல இரவுகள் போதனை புரிந்தது. இடது பக்கமும் திரும்பிப் படுக்காமல், வலதுபுறமும் சாயாமல், நேராகப் படுத்துக்கொண்டு, இரண்டு விதமான பேச்சையும் கேட்க மறுத்தாள், கல்யாணி. முடிந்ததா? அதுதான் இல்லை; படுக்கை அறையின் சுவர்களிலே தேவன் தேவியோடு திருக்கோயில் கொண்டிருக்கும் காட்சியும், சினிமா நட்சத்திரங்கள் காதலருடன் கொஞ்சும் காட்சியும் படங்களாக இருந்துகொண்டு, கண்ணுக்கும் கருத்துக்கும் கசையடி தந்தன! கண்ணை மூடிக்கொள்வாள், சில இரவுகளில்; இக் காட்சிகளைக் கண்டால்தானே கருத்துக்குத் தொல்லை தரும் என்று எண்ணி. ஆனால் அந்த அழகியின் நிலைமையை என்னென்பது! கண்களை மூடினதும், கண்ணுசாமி வந்து நிற்பான், புன்சிரிப்புடன், பசி நிரம்பிப் கண்களுடன்!! அந்த மனக்காட்சி, படக்காட்சிகளைவிட அதிகக் கஷ்டம் தரும்! மீண்டும் தலையணைமீது வலதுபுறமோ, இடதுபுறமோ சாய்ந்து படுப்பாள் அந்தப் பாவை. இரண்டுபுறமும் இன்பத் தூதுமொழி பேசும்!! என் செய்வாள் கல்யாணி!

“கண்ணு தூக்கம் வரவில்லையா? ஏன்? கொசுக்கடியா?’ என்று கல்யாணியைச் சில இரவுகளிலே தாயார் கேட்பதுண்டு.

‘‘ஆமாம்’’ என்று பதில் பிறக்கும் கல்யாணியிடமிருந்து. தான் கேட்டதற்குத்தான் அந்த “ஆமாம்” பதிலாகக் கிடைத்தது என்று எண்ணிக்கொள்வாள், தாயார்! கல்யாணி, “ஆமாம் என்று சொன்னது தன் தாயாரின் கேள்விக்கு அல்ல. அவள் மனதிலே சதா எழுப்பியபடி இருந்த கேள்விக்கு அளித்தாள் அந்தப் பதிலை.

“ஏன் வீணாக முயற்சிக்கிறாய் பெண்ணே! அவன் உன் நெஞ்சிலே குடிபுகுந்துவிட்டான். இனி அவனை உபதே

சமோ உருட்டல் மிரட்டலோ எதுவும் வெளிப்பேற்ற முடி யாது. காலம், உன் சம்மதத்தைக் கேட்டுக்கொண்டா உன் கணவன் உயிரைப் பறித்துக்கொண்டது! அதுபோலவே, உன் நெஞ்சிலே அவன் புகுந்துகொண்டது, உன்னைக் கேட்டுச் சம்மதம் பெற்ற பிறகு அல்ல. நீ எவ்வளவோ தடுத்தாய், போரிட்டாய்; அவனைச் சுட்டுவிடுவதுபோலப் பார்த்தாய், அவன் நெஞ்சம் கலங்கவில்லை, பின் வாங்கவில்லை. நீ எதிர்க்க எதிர்க்க அவனுடைய உறுதி பலப்பட்டது. நீ உதாசீனம் செய்வதுபோலப் பாசாங்கு செய்யச் செய்ய அவனுடைய பிரேமை, ஒன்று பதினாயிரம் என்ற அளவிலே வளர்ந்தது. இதோ பார், கல்யாணி! அதே கண்ணுசாமி உன்னைக் கலியாணம் செய்துகொள்ளச் சம்மதித்தால் உனக்கு என்ன தடை? பதறாதே! தாலி இழந்தவளுக்குக் கலியாணமா என்று தாத்தா காலத்துக் கதை பேசாதே. தாலி கட்டுவதற்கு ஆள் இருக்குமவரை, தாலியை இழப்பது என்ற பதத்திலே பொருள் ஏது? இப்போது சொல்லு, கண்ணுசாமியைக் கலியாணம் செய்துகொள்வது என்றால் உனக்குக் களிப்புதானே? ஒளிக்காமல் பேசு! இஷ்டம் தானே?" என்று மனதிலே கிளம்பும் கேள்விக்குக் கல்யாணி "ஆமாம்" என்ற பதிலை அளிப்பாள். அதை அந்தத் தாய் கொசு கடிக்கிறதா என்று கேட்ட கேள்விக்குக் குமரி கூறிய பதில் என்று எண்ணிக்கொண்டு போய்விட்டாள் படுக்க!

கனியை அந்தக்கட்டழகியின் கரத்திலே தந்து கண்ணுசாமி தன்னையும் மறந்தவனாய், அவள் கரத்தைத் தொட்டு இழுத்துவிட்டான்.

"ரொம்ப நல்லாயிருக்கு யோக்யதை!" என்று அந்தச் சிற்றிடையாள் சீறினாள். கண்ணுசாமி, "தெரியாத்தனமாகச் செய்துவிட்டேன், கோபிக்கவேண்டாம். இனிமேல் ......" என்று குளறிக்கொண்டிருக்கும்போதே, கல்யாணி

கூடத்து அறைக்குள் சென்றுவிட்டாள், கண்களிலே ததும்பிய நீரைத் துடைத்துக்கொள்ள. மிரண்ட பார்வையுடன் நடந்து சென்றான் கண்ணுசாமி வெளியே. தடுமாற்றம் தலை இறக்கம், தவிப்பு இவ்வளவும் அவனைத் தாக்கின தகர்ந்ததா அவன் ஆசை! இல்லை! பதுங்கிற்று, பாய்வதற்கு பாயவும் செய்தது மற்றோர் நாள் அன்று நிலைன்று கோழைக்குக்கூடத் தைரியம் கொடுக்கக்கூடியதாக இருந்தது. செட்டியார் கடையிலே அதிக வேலையிலே ஈடுபட்டிருந்தார். செட்டியாரின் சம்சாரமோ, சொந்தக்காரர் வீட்டிலே திடீரென்று ஏற்பட்ட ஒரு சாவுச் சடங்குக்குச் செல்லவேண்டி நேரிட்டது. கல்யாணி அன்று கட்டிக் கொண்டிருந்த சேலை நீலநிறம்' கண்ணுசாமி கவிஞனல்ல; ஆனால் அந்த நீலநிறச் சேலைக்கும், நிலவையொத்த முகத்துக்கும், நட்சத்திரங்கள்போல் ஜொலித்த கண்களுக்கும், மிக அருமையான பொருத்தம் இருக்கக் கண்டான். நிர்மல மான நீலநிற வானத்திலே முழு நிலவு காட்சி தருவதுபோ லிருந்தது, அன்று நீலநிறச் சேலையைக் கட்டிக்கொண்டு கலயாணி வீட்டிலே இருந்த சாயை. ஒரு முறை தொட்டு விட்டுத் தீயால் தாக்குண்டவனுதலால், கல்யாணியைக் கண்டதும் கொஞ்சம் கலக்கம ஏற்பட்டது. அதைக் கண்டதும் அவனுக்கே சிரிப்பு உண்டாயிற்று! கேலியாகச் சிரித்தபடி, "வா! கண்ணுசாமி! கைகாரன் நீ!" என்று வரவேற்றாள். அந்தச் சிரிப்பு, கண்ணுசாமிக்கு டானிக்காகிவிட்டது. அருகே சென்றான், அவள் கொஞ்சம் அஞ்சி ஒதுங்கினாள். "அடடா! சமயற் கட்டுக்குள் பூனை......" என்று கூறினான், "எங்கே?" என்று கேட்டுக்கொண்டே சமயற்கட்டுப் பக்கம் கல்யாணி திரும்பினாள். கண்ணுசாமி எங்கிருந்தோ தைரியத்தை அமோகமாக வரவழைத்துக்கொண்டு, கல்யாணியை அப்படியே அணைத்துக்கொண்டான். கன்னத்திலே கன்

ம்! பிறகு உதடுகளுடன் உதடு! ஆனந்த அணைப்பு! அமிர்தரசம்போன்ற முத்து மழை! இவ்வளவும் மின்சார வேகத்தில்! கல்யாணியின் கண்கள் மூடிக்கொண்டிருக்கையில்! கண்ணுசாமியின் உடல் ஓரே ஆட்டம் பயத்தால்! மிகக் கஷ்டத்துடன் தன்னை அந்த அணைப்பிலிருந்து விடுவித்துக்கொண்டு, "இதென்ன சனியன்! யாராவது பார்த்தால் என்ன ஆகும்?" என்று கோபம் கொஞ்சம், பயம் பாதி [illegible]த்துக்குமேல், மற்றப் பகுதி பெண்களுக்கே சொந்தமான அந்த சரசம், ஆகிய கூட்டுக் கலவைக் குரலிலே, கேட்டாள் கல்யாணி.

அடுத்த கட்டத்தின்போது "அம்மா வந்துவிடுவாங்க, விடுங்க! கண்ணில்லே! அதோ சத்தம் கேட்குது" என்று கூடத்திலே கொஞ்சுவாள், கண்ணுசாமியின் கரத்திலே சிக்கிக்கொண்டு. "சும்மா இரு கண்ணு! சமயல்கட்டிலே இருந்து அவங்க வருவதற்குள்ளே இன்னும் ஒரே ஒரு..." என்று கண்ணுசாமி கொஞ்சுவான். காதலர்கள் முத்தங்களைக் [illegible]ண்ணும்போதுதான் தவறுமே! பத்து ஐந்தாகும், பதினைந்து ஒன்பதாகும்! கூடத்திலே வாலிப விருந்து தயாராகும்; சமயற்கட்டிலே, சீதாலெட்சுமி அம்மையார் குழம்புக்குக் காரமும் உப்பும் சரியாக இருக்கிறதா [illegible] சத்தற்ற (ஆனால் தேவையான) கணக்கிலே ஈடுபட்டுக் கிடப்பார்கள்.

1938-ல் தங்கக் கம்பியாக இருந்தவனை 39-ல் தடிக் கழுதையாக்கி, 39 முடிவதற்குள், கண்ணுசாமியைக் கடையைவிட்டே நிறுத்திவிட்டு, கலியாணியின்மீது செட்டியார் தமது சீற்றத்தை ஏவினார்—எலி ஓடி வந்தால்கூட பயப்படும் சுபாவமுடைய கல்யாணிக்கு, எங்கிருந்துதான் அந்தத் தைரியம் பிறந்ததோ தெரியவில்லை.

"நடந்தது நடந்துவிட்டது. என்னை வேண்டுமானால் கொன்றுபோட்டுவிட்டு, நீங்கள் சுகமாக வாழுங்கள். உங்க கௌரவம் நிலைக்கவேண்டுமல்லவா! என் யௌவனம் பாழாவதைப்பற்றிக் கவலை வேண்டாம். என்னைக் கொன்றுவிடு, அப்பா. குலம், குடும்பம், கௌரவம் இவற்றுக்கு ஆபத்து

இராது. ஒரு மங்கை சாவாள், ஒரு சிசுவும் கருவிலேயே சாகும். ஸ்திரிஹத்தி, சிசுஹத்தி மகா பாதகம் என்று பயப்படவேண்டாம்! விதவைகளைக் கொடுமை செய்து பழக்கப்பட்ட இந்தத் தர்மவான்களுக்கு இந்தப் பாதகங்கள் பழைய சோறு. பயப்படவேண்டாம்'' என்று சொன்னாள் கல்யாணி.

''கல்யாணி கர்ப்பவதியாமே!'' என்று கூறித், தலையிலே அறைந்துகொண்டார் செட்டியார்! கல்யாணி, கண்ணுசாமி கடையைவிட்டு நிறுத்தப்பட்ட பத்து நாட்களிலே, அவனுடன் வெளியூர் சென்றுவிட்டாள். ''ஓடிவிட்டாள்! ஓடிவிட்டாள்! கடைக்காரப் பையனுடன் கல்யாணி ஓடிவிட்டாள்'' என்று ஊரிலே பேசிக்கொண்டனர். 1940-ல் கண்ணுசாமி டைரி எழுதியிருந்தால்,

''என் இன்பவல்லியும் நானும் சுகமாக இருக்கிறோம். இந்தக் காஞ்சிபுரத்துக்கு வந்து கடை வைத்ததிலிருந்து, எனக்கு வருமானத்துக்கும் குறைவில்லை. என் அருமை மனைவிக்கு, சுகப் பிரசவம். லேடி டாக்டர் அக்கரையோடு, பிரசவ காரியத்தைக் கவனித்தார்கள், என் மகனுக்கு ஆதிலிங்கம் என்று இரண்டு தாத்தாக்களின் பெயரைக் கூட்டிப் பெயரிடத் தீர்மானித்திருக்கிறேன்'' என்று எழுதி இருப்பான். ஆனால், டைரி ஏது, பலசரக்குக் கடை கண்ணுசாமிக்கு! லேடி டாக்டரின் டைரியில் காணப்பட்ட குறிப்பு இதனைத் தெரிவித்தது.

குழந்தை:—ஆண்; நிலைமை:—ஆரோக்கியமாக அழகாக இருக்கிறது; தகப்பனார் பெயர்:—கண்ணுசாமி; தொழில்:— வியாபாரம்; தாயார் பெயர்:—கல்யாணி.

கண்ணுசாமி டைரியிலே எழுதியிருக்கவேண்டியதை வேறு மொழியிலே, லேடி டாக்டரின் டைரி எடுத்துக்காட்டிற்று. நகரசபை ஜனனமரணப் பதிவாளரின் புத்தகத்திலும்,

குழந்தை: ஆண்; பெயர்: ஆதிலிங்கம்; தகப்பனார்பெயர்: கண்ணுசாமி; தாயார் பெயர்: கல்யாணி—என்ற குறிப்பு பதிவாகிவிட்டது.


7602a 42785